ஆனி - ஆடி 1996



# கதலி

இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

மொத்த விற்பனையில் முன்னணி வகிப்பவர்கள்

# வேந்தா என்ரபிரைஸ்

VEENTHA ENTREPRISE

சுத்தமான
சுவையான
ரபீனாவின்
தயாரிப்புகள்

TEL:4931047 FAX:43040074

**7,Place Pablo Picasso**
**93260 Noissy Le Grand**
***FRANCE***

# உங்களோடு ஒரு அறிமுகம்

உங்களோடு உறவாட வந்துவிட்டது கதலி. பல வருடங்களாக ஒரு சஞ்சிகை வெளியிட வேண்டும் என்ற ஆர்வம் இருந்தாலும் உலகம் முழுவதுமே பத்திரிகைத்துறை கொஞ்சம் ஏழ்மையானது என்பது அனைவரும் அறிந்த விடயம். அதன் தயாரிப்பின் பின்புலங்களை கொஞ்சம் தயார்படுத்துவதில் வருடங்களே ஓடிவிட்டன. கதலி இதழில் நடப்புச் செய்திகளுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இரண்டுமாதங்களுக்கு ஒன்றாக இதுவர இருப்பதால் செய்திகளின் முக்கியத்துவம் குறைந்தபின்தான் உங்கள் கைகளுக்கு வந்துசேரும். காலப்போக்கில் குறுகிய காலங்களுக்கு ஒன்றாக வெளிவரும் வாய்ப்பு வரும்போது நடப்பு செய்திகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்போம்.

எம்மவர்களின் கலைவெளிப்பாடுகள், பண்பாட்டு தன்மைகள், தமிழ்மொழியின் தனித்துவம் பேணல், இன்னும் இங்கு வாழும் இளந்தலைமுறையினரின் தாய்மொழிஈடுபாட்டை அதிகரிக்கச்செய்தல் போன்ற விடயங்களில் கதலி கவனம் கொள்ளும்.. முடிந்தவரை சமூக மேம்பாட்டிற்கான விடயங்களை கொஞ்சம் பொழுதுபோக்கு அம்சங்களை கலந்து சொல்வது கதலியின் பாதையாக இருக்கும். இன்னும் எமக்குள் இலைமறை காயாக இருக்கும் எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும் கதலி முயலும். இந்த இதழில் பங்குகொள்ளும் ஓரிருவரை தவிர அனைவரும் பெரும்பாலும் புதியவர்கள்.

இது உங்கள் சஞ்சிகை. இதை சரியானமுறையில் வழிநடாத்துவதும் வளர்த்தெடுப்பதும் வாசகர்களாகிய உங்கள் கைகளில்தான் இருக்கிறது. வர்த்தக பெருமக்களுக்கும் ஒருவார்த்தை......விளம்பரங்களின் மூலம் நீங்கள் தரும் ஆதரவு கதலியை வாடவிடாமல் வாழவைக்கும்.

ஆக்கபூர்வமான விமர்சனங்களை நாடிநிற்கிறது கதலி

அடுத்த இதழில் சந்திப்போம்.

கதலி

# உள்ளே......

வண்ணை தெய்வம், சொர்ணம்மா
அம்பிகா- இராஜலிங்கம், என்றுதணியும் எங்கள்....
ரமேஸ்சிவரூபன், என் முதுகுக்குப் பின்னால்..
மணிகண்டன், வருங்காலம்
கொய்கை கண்ணன், புரியாதபுதிர்கள்
பபிலா அகதி
விக்கினா, அவள் ஒரு ஜீவன்(ர)
தமிழ்மகன், ஒரு நோக்கு
கலைவாணி, கலைவாழ்வில்....
வினீசியா-ஸ்ரீபன்சன், புதுவாழ்வை அமைப்போம்
ஸ்ரேல்லா ஜெகதீஸ் தாய்ப்பாலும்....

## ஆக்கங்கள் அனுப்புவோர் கவனத்திற்கு!!

தாளின் ஒரு பக்கத்துக்கு மட்டுமே எழுதி அனுப்பவும். அத்தோடு முடிந்தவரை தெளிவான எழுத்துக்களில் எழுதியனுப்பவும். அதிக அளவில் நகைச்சுவைத் துணுக்குகளையும், செய்தித் துணுக்குகளையும், இன்னும் சமூக விழிப்புணர்வினை ஊட்டக்கூடிய தரமான சிறுகதைகளையும் எதிர்பார்க்கிறோம்.

ஆசிரியர்:
இணுவையூர் பவன்-கணபதிப்பிள்ளை

ஓவியங்கள், சில்வஸ்ரர் சதீஸ்

வடிவமைப்பு: காந்தன்/சதீஸ்/பவன்
வெளியீடு: கதலி இலக்கிய வட்டம்
தொடர்புகளுக்கு:BAVAN KANAPATHIPPILLAI
3,RUE LAVOISIER
91350 GRIGNY
FRANCE

# ரசித்ததில் கொஞ்சம்.........

எங்கள் போராட்டத்தில் அக்கறைகொண்ட தமிழகத்து மக்கள் சிலர் தங்கள் தவிப்பினை பல்வேறு வகைகளில் வெளிப்படுத்துகின்றனர். மத்திய மாநில அரசுகள் காட்டும் மாற்றாந்தாய் மனப்பான்மை கண்டு மனங்கொதிக்கும் ஒரு சாதாரண குடிமகனின் தவிப்பு இந்த கவிஞனின் வார்த்தையில் இப்படி வெளிப்படுகிறது. நேரடியான வார்த்தைப்பிரயோகங்களின்றி சிலேடைவடிவில் ராமனை அதிகாரமுள்ள ஆள்பவனாயும் சீதையை தமிழீழ மக்களாயும் இலக்குவனை சாதாரண குடிமகனாயும் உருவகித்து இந்த சொற்சித்திரம் தீட்டப்பட்டுள்ளது. கவிக்கோ அப்துல் ரகுமானின் "கரைகளே நதியாவதில்லை" தொகுப்பில் இருந்து ஒரு அலை..

# அயல்நாட்டு சீதை

**இலக்குவன்** : அண்ணா! இந்தக்கடல் நீரில் அண்ணியின் கண்ணீரை காணமுடியவில்லையா? உள்ளத்தை உலுக்கும் இதன் ஓலத்தில் அண்ணியின் அழுகையை நீங்கள் கேட்கவில்லையா? நம் காலில் விழுந்து கெஞ்சிக்கதறும் அலைகளின் முறையீட்டை நீங்கள் உணரமுடியவில்லையா?

**இராமன்:** கண்ணும் காதும் எனக்கு உண்டு.

**இலக்:** பின் ஏன் சும்மா இருக்கிறீர்கள்? மராமரத்தையும், வாலியின் உரத்தையும் துளைத்துச் சல்லடையாக்கிய உங்கள் கணை உறங்கிவிட்டதா?

**இரா** : இதில் நாம் தலையிட முடியாது. இது அயல் நாட்டுப்பிரச்சினை.

**இலக்:** உங்களை நம்பி வந்தவள், உங்களோடு பிரிக்க முடியாத சம்பந்தம் உடையவள்- அவளுடைய பிரச்சனையையா? அயல் நாட்டுப்பிரச்சனை என்கிறீர்கள்?

**இரா:** நீ இறந்த காலத்தைப் பற்றி பேசுகிறாய் சீதை இப்போது இலங்கையின் பிரஜை.

**இலக்:** இராமனுடைய வாயில் இராவணனுடைய வார்த்தை. இலங்கையின் பிரஜை என்பதற்கும் இராவணனுடைய பிரஜை என்பதற்கும் வேறுபாடு உண்டு அண்ணா! பிரஜையை பெண்டாள நினைப்பதுதான் அரச பரிபாலனமோ? அயல் நாட்டுப் பிரச்சனை என்றே வைத்துக்கொள்வோம். கிஷ்கிந்தை விவகாரத்தில் நாம் தலையிடவில்லையா?அதுவும் அயல்நாட்டுப் பிரச்சனைதானே?

சுக்கிரீவனுக்கு அதரவு காட்டினீர்கள். நெருங்கிய உறவுடைய சீதை விடயத்தில் மட்டும் ஏன் இந்த பாரபட்சம்.

இரா: வாலிவிவகாரத்தில் நான் நேரடியாக தலையிடவில்லை, மறைமுகமாக இருந்துதான் அம்பை ஏவினேன். உனக்கே தெரியும்.

இலக்: அந்த அம்புக்கு இப்போது நாணம் வந்துவிட்டதா?

இரா: இப்போது நிலமை வேறு. சிருங்கிபேரம், கிஷ்கிந்தை, வீடணன் மூலமாக இலங்கை இப்போது என் தலைமையை ஏற்றிருக்கின்றன. இந்தப் பொதுநலக் குழுவுக்கு நான் தலைவன்.சீதைக்காக நான்போரிட்டால் இந்தத் தலைமைப்பதவியின் மரியாதை என்னாவது.

இலக்: அண்ணா! நீங்களா இப்படி பேசுகிறீர்கள்? அண்ணியின் மானத்தைப் புதைத்த சமாதி மேடையையா நீங்கள் சிம்மாசனமாக்க விரும்புகிறீர்கள் அண்ணா! இராவணன் கொடுமைக்கு ஆளாகித் தவிக்கும் தங்கள் குலக்கொடியின் கண்ணீரைப் பார்த்து மிதிலை கொதித்துக் கொண்டிருக்கிறது. அண்ணியை காப்பாற்றும் பொறுப்பை நாம்தட்டிக் கழிக்கிறோம் என்று அவர்கள் கோபப்படுகிறார்கள்.

இரா: இந்தப் பிரச்சனையில் நாம் உணர்ச்சிவசப்படக் கூடாது. இலங்கை இராவணனுடைய நாடு. அவனுடைய ஆதிபத்திய உரிமையை நாம் மதித்தாக வேண்டும்.

இலக்: அண்ணியின் மீது அவனுக்கேது ஆதிபத்திய உரிமை? யாராவது கொடுத்தார்களா? அவனாக எடுத்துக் கொண்டதுதானே? கொள்ளையனுக்கு அரசியலில் மட்டும் சிம்மாசனமா? கல்லாய் கிடந்த அகலிகைக்கு கருணை காட்டினீர்கள். அநியாயமாக நாடு விட்டு துரத்தப்பட்டசுக்கிரீவனுக்கு அதரவு காட்டினீர்கள். நெருங்கிய உறவுடைய சீதை விடயத்தில் மட்டும் ஏன் இந்த பாரபட்சம்.

இரா: அதுதான் அனுமனை இராவணனிடம் தூதனுப்பினேனே போதாதா?

இலக்: அதனால் என்ன பயன் ஏற்பட்டது.வீணாக அனுமன் வாலை சுட்டுக்கொண்டு வந்தான். அவ்வளவுதானே!

இரா: இல்லை, சீதையின் விடயமாக அவர்கள் வட்டமாக உட்கார்ந்து பேச சம்மதித்திருக்கிறார்கள். இது வெற்றியில்லையா?

இலக்: யாருக்கு வெற்றி? என்ன பேச்சுவார்த்தை? இராவணனுடன் சீதை எப்படி சேர்ந்து வாழவேண்டும் என்பதை ஆராய்வதற்கா பேச்சு? இதென்ன கேவலம் அண்ணியை எப்படி விடுவிப்பது என்பது இப்போதுள்ள பிரச்சனை

இரா: இதற்கு அரசியல் தீர்வுதான் காணமுடியும். வீடணனும் அதைத்தான் சொல்கிறான்
இலக்: காற்றே! என் அண்ணியிடம் போய்ச்சொல். தேடித்தவிக்கும் அவள் கண்களில் துளிக் கண்ணீர் வழியவேண்டாம்; கனற்பொறிகள் சிதறட்டும். அந்தக் கோபநெருப்பில் இராவணனும் அவன் பூட்டிய விலங்குகளும் எரிந்து சாம்பலாகட்டும்.

இலக்: இராவணனுக்கு எதிராக வீடணனும் கும்பகருணனும் சேர்ந்து போராடியிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது.

இரா: அவர்கள் சேர்ந்து போராடமாட்டார்கள். அவர்கள்வழி வெவ்வேறு. வீடணன் என்னுடைய உதவியை நாடி இங்கே வந்திருக்கிறான். கும்பகருணன் இராவணனைவிட்டு விலகமாட்டான். "செஞ்சோற்றுக்கடன்" மறுபடியும் சொல்கிறேன். இந்தப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வுதான் காணமுடியும்.

இலக்: விடுதலையும் அரசியல் தீர்வுதான் அண்ணா! வில்லை முறித்து அண்ணியை கைப்பிடித்தீர்கள். அதன் பொருள் எனக்கு இப்பொழுதுதான் விளங்குகிறது. இதோ! இப்போது கையில் பிடித்திருக்கிறீர்களே. இந்தவில் வானவில்லைப்போல் அழகாக இருக்கிறது. சூரிய வம்சமே உனக்காக நான் கண்ணீர் வடிக்கிறேன். சந்திரனுக்குத்தானே களங்கம் உண்டு சூரியனே! உன்னிடம் எப்படி களங்கம் வந்தது?
(பெருமூச்சு விட்டபடி இலக்குவன் நடந்து போகிறான். ஒரு சிற்றணில் தனியாக சிறுசிறு கற்களை உருட்டிக் கடலில் போட்டுக்கொண்டிருக்கிறது. அதன் முதுகை அவன் பரிதாபத்தோடு தடவிக் கொடுக்கிறான்.)

நான் திடுக்குற்று விழித்தெழுகிறேன். பக்கத்தில் "சிங்கள ராணுவத்தின் வெறியாட்டம்" என்று அலறிக்கொண்டு கிடந்தது செய்தித்தாள். அதற்குமேல் இராமாயணம் விரிந்து கிடந்தது. காற்றில் யுத்தகாண்டத்தின் பக்கங்கள் படபடத்துக் கொண்டிருந்தன.)

16-05-84 *அப்துல் ரகுமான்*

## திருமண அழைப்பிதழ்

நிகழும் எலிவருடம் ஆனிமாதம் 23ம் நாள்

எமது புத்திரன் செல்வன் லீவான்சூவிற்கும்

எங்கள் புத்திரி மியோனாவுக்கும்

நடைபெறும் திருமணத்திற்கு சுற்றம்சூழ வருகைதந்து....

என்ன குழப்பமாக இருக்கிறதா?

இந்துக்கள் யுவ, பவ, சோபகிருது எனபெயரிட்டிருப்பதுபோல சீனர்கள் எலி, மாடு, புலி, முயல், வேதாளம், பாம்பு, குதிரை, ஆடு, குரங்கு, சேவல், நாய், பன்றி எனவருடங்களை பன்னிரண்டாக வகுத்திருக்கிறார்கள். எனவே இந்த ஆண்டு அவர்களுக்கு எலியாண்டு.


# SUN VIDEO

## சன்வீடியோ

Contact us for :

*Wedding, Birthday, Purbty ceremony* & all ather functions .

We also deal with your cermonies **photos .**

**SEYAPALN**
4, rue de L Orge
91000 Evry
**Tel**: 64-97-90-89

# சொர்ணம்மா



மீன் விற்கப் போனால் வெய்யில் அடிக்குமாம்! மாவிற்கப்போனால் மழை பெய்யுமாம். இது ஓவசியர் குடும்பத்திற்கு அப்படியே பொருந்தும். ஓவசியர் வேலுப்பிள்ளை, அவர் மனைவி சொர்ணம், மகள் வதனி, மகன் வதனன். இவர்கள் நால்வரும் இடம் பெயர்ந்து புகலிடம் தேடி இடம் பெயர்ந்து நடந்து கொண்டிருக்கும் மக்களோடு சேர்ந்து மூன்றுநாட்களாக நடந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களின் நடைப்பயணத்தில் துணைக்கு அவ்வளவு கூட்டமில்லை. யாழ்ப்பாணத்தில் இருந்து மக்கள் எல்லாரும் வெளியேறிய போது சில குடும்பங்கள் வீடுவாசல் சொத்து சுகங்களை விட்டுவிட்டு எப்படி போவது எனும் கவலையில் வெளியேறாமல் அடம் பிடித்துக் கொண்டிருந்தார்கள். இரண்டு மூன்று நாட்கள் சென்றதும் தான் தாங்கள் அங்கு இனியும் இருப்பது ஆபத்து என்பது ஓவசியருக்கு, சொர்ணம்மாவிற்கு புரியவந்தது. சொத்துக்களை திரும்பவும் தேடலாம், ஆனால் உயிர்களை??

கொக்குவில் பொற்பதி அம்மன் கோவிலிற்கு அருகில் பெரிய தென்னந் தோட்டம். நாற்சார் வீடு இல்லை பங்களா. அதைச்சுற்றி மாமரங்கள், ஆடுமாடுகள். இவை எல்லாவற்றையும் விட்டுவிட்டு போவதென்றால் சும்மாவா? ஆனாலும் என்ன செய்வது. புறப்பட்டு விட்டார்கள். இவர்களைப் போல்தான் இன்னும் சில குடும்பங்களும். எங்கே போவது ? "சாவச்சேரிக்கு போகலாம் அங்கு தன்னுடன் வேலைசெய்த நல்லதம்பி இருக்கிறார். அவருடன் தங்கலாம்" இது வேலுப்பிள்ளை கொடுத்த ஐடியா. அங்கு போனபின்தான் தெரிந்தது நல்ல தம்பியே வீட்டில்

வீட்டில் நிம்மதியாக இருக்க முடியாத அளவிற்கு நல்லதம்பியின் உறவினர்களும், நண்பர்களும் குடும்பம் குடும்பமாக நிரம்பியிருந்தார்கள். வேலுப்பிள்ளையை போ என்று நல்லதம்பி சொல்லவில்லை. ஆனாலும் அங்கு தங்க வேலுப்பிள்ளைக்கு விருப்பமில்லை. நல்லதம்பி கொடுத்த அரை வயிறு கஞ்சியை குடித்துவிட்டு விடைபெற்று விட்டார்கள். முன்பெல்லாம் வேலுப்பிள்ளையர் நல்லதம்பி வீட்டிற்கு வந்தால் ஒரு கோழியின் ஆயுள் முடிந்து விடும். இன்று... வேலுப்பிள்ளையருக்கு இன்று குடித்த கஞ்சி அமிர்தமாக

இருந்தது.

சொர்ணம்மாவின் தூரத்து உறவுக்காரர்கள் மிருசுவிலில் இருக்கிறார்கள். அங்கு போகலாம் என்ற மனைவியின் ஆலோசனைப்படி மிருசுவிலை நோக்கி நடக்கத் தொடங்கியது ஓவசியர் குடும்பம். அங்கும் அதே நிலமை! தேனீருடன் புறப்பட்டு விட்டார்கள். கொடிகாமத்தில் தங்கள் வீட்டில் வாடகைக்கு இருந்த கதிர்காமு வாத்தியார் இருக்கின்றார். அவர் தம்மை கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையில் கொடிகாமம் போனால் அங்கு அதைவிட மோசம். கதிர்காமு வாத்தியார் வீட்டு முற்றத்து மாமரத்தின் கீழே,


கோடிப்பக்கம் இருக்கும் மாட்டுக்கொட்டில், தாவாரப்பகுதி இப்படி எல்லாப் பகுதிகளிலும் பல குடும்பங்கள் இருந்தது.

அவரை சந்திக்காமலே அவர்களின் நடைப்பயணம் மீண்டும் தொடர்ந்தது.

மூன்று நாட்களாளவே அவர்களது நடைப்பயணம் தொடர்ந்தது. நடக்கின்றார்கள் எங்கு போவது என்ற திசை தெரியாமல்! யாரிடம் போவது என்ற குறிக்கோள் இல்லாமல்!! வேலுப்பிள்ளையும் சின்னம்மாவும் மன வைராக்கியத்தோடு நடக்கிறார்கள். ஆனால் பத்து வயதும், பன்னிரண்டு வயதும் உடைய அந்த சின்னஞ் சிறுசுகளால் இப்படி நாட்கணக்காக தொடர்ந்து நடக்க முடியுமா?

பார்க்க முடியாததால்
பார்க்க முடியும்



கூடில்லாத பறவை
குஞ்சுகளை தாங்கிச்
செல்லும்

நல்ல உணவில்லை, தூக்கமில்லை. அந்த சிறிசுகள் மயங்கி விழாக் குறை. இருந்தும் நடக்கிறார்கள்.

கிளிநொச்சி வந்துவிட்டார்கள். இங்கும் எல்லா இடங்களிலும் யாழ்ப்பாணத்து மக்கள் அகதிகளாக....... வேலுப்பிள்ளை ஓவசியருக்கு கிளிநொச்சியில் யாரையும் தெரியாது. தெரியாவிட்டால் என்ன? இங்கு இருப்பவர்கள் எல்லாம் என்ன தெரிந்து கொண்டா வந்தார்கள்! எல்லோருக்கும் நடப்பது போலவே தங்களுக்கும் நடக்கட்டும் என வேலுப்பிள்ளையும் சொர்ணம்மாவும் தங்களுக் குள்ளே நிம்மதிப் பட்டுக்கொண்டு தங்குவதற்காக ஒரு மரநிழலை தேடினார்கள்.

அனேகமாக எல்லா மரங்களுக்கு கீழும் மக்கள் குடும்பம் குடும்பமாக... செர்ணம்மாவின் மாட்டுத் தொழுவத்திலேயே நாலைந்து குடும்பங்கள் வசதியாக வாழலாம். அதை நினைக்க நினைக்க சொர்ணம்மாவிற்கு அழுகை அழுகையாக வந்தது.

சொர்ணம்மாவின் வளவில் கள்இறக்கும் முருகேசுவிற்கு இறக்கிய கள்ளை வைத்து எடுப்பதற்கும் கத்தி தீட்டுவதற்கும் என்றே தனியாக ஒரு கொட்டில் போட்டுக் கொடுத்தவர்கள். வேலுப்பிள்ளை எல்லோருடனும் அன்பாக பழகுபவர். சாதிமத பேதம் பார்ப்பவரல்ல. சொர்ணம்மா அவருக்கு நேர்மாறு. முருகேசுவை முருகேசன் என்றுதான் கூப்பிடுவாள். தனது பணச் செருக்கையும் பணத்திமிரையும் காட்டுவதற்காக அடிக்கொரு தடவை "முருகேசன் அந்த விறகை ஒருக்கா கொத்திவிடு, அந்த கோழியை ஒருக்கா உரிச்சு தந்திட்டுப்போ" சொல்லிக் கொண்டிருப்பாள். இப்படி ஏதாவது வேலைகளை முருகேசுவிற்கு சொல்வது அவளுக்கு பொழுது போக்கு. ஆனால் முருகேசுவின் மனம் நோகும்படி ஒன்றும் சொல்வதில்லை.

தன்னுடைய மிடுக்கை கண்ணியமாக காட்டிக் கொள்வதில் சொர்ணம்மாவிற்கு நிகர் சொர்ணம்மாதான். "முருகேசன் நீநல்லா களைச்சுப் போனாய் இந்தா கோப்பித் தண்ணியை குடி" என சொல்லி ஒரு யானைப்போத்தல் நிறைய பால்சேர்த்த கோப்பியை கொடுப்பதோடு நில்லாது "இந்தா வீடியை சிகரட்டை வாங்கி பத்து" என்று இரண்டு மூன்றுரூபாயும் கொடுப்பது வழமை. இப்படி செய்தால்தான் தனக்கு பெருமை என்பது சொர்ணம்மாவின் நினைப்பு. ஆனால் இன்றோ?.... பெருமைப்பட்டுக் கொள்ளும்படி எதுவுமே இல்லை சொர்ணம்மாவிடம்.

வேலுப்பிள்ளை வெகு தூரம்வரை தனது பார்வையை மேயவிட்டார். சிலர் கொட்டில்கள் அமைத்து கொஞ்சம் ஓய்வாக இருந்தார்கள். சிலர் கட்டிக் கொண்டிருந்தார்கள். வேலுப்பிள்ளையரின் மடியில் சொஞ்சம் பணம் இருக்கிறது.

தானும் ஒரு கொட்டில் போட நினைத்தாலும் அதற்கும் அவருக்கு ஒரு ஆள் தேவைப்பட்டது. மகள் வதனியால் பசியை அடக்க முடியவில்லை. "அப்பா பசிக்குது" என்று சிணுங்கினாள். வதனன் ஒன்றும் கேட்கவில்லை. ஆனால் அவனுக்கும் பசிதான். தூரத்தில் இருந்த ஒரு கொட்டிலை நோக்கி எல்லோரையும் அழைத்துப் போனார் வேலுப்பிள்ளையர். அவர்களிடம் காசு கொடுத்தாவது ஏதாவது பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுக்கலாம் என்ற எண்ணம்தான். கொட்டில் வாசலில் நின்று மெதுவாக குரல் கொடுத்தார்"வீட்டிலை ஆர் இருக்கிறியள்" கொட்டிலுக்குள் இருந்து ஒரு பெண்குரல்தான் கேட்டது. "ஆரோ கூப்பிடினம் போலையிருக்கு ஆரெண்டு போய் பாருங்கோ" வேலுப்பிள்ளையருக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை.

. "ஓவசியர் ஐயா, ஓவசியர் அம்மா.." அதற்குமேல் முருகேசுவால் கதைக்க முடியவில்லை. நா தழு..தழுத்தது. சொர்ணம்மாவிற்கு ஆச்சரியத்துடன் பொறாமையும் சேர்ந்தே வந்தது. "பங்களாவில வாழ்ந்த நாங்கள் இருக்க இடமில்லாமல் அலையிறம். முருகேசன் கொட்டில் போட்டு " அந்த வேதனைதான் பொறாமையாக வெளிவந்தது.

"முருகேசு பிள்ளையள் பசியில இருக்குதுகள்" வேலுப்பிள்ளையர் முடிக்கவில்லை. சொர்ணம்மா சீறி விழுந்தாள்."பசிச்சா.. இப்ப என்ன செத்துப்போவினமே? கொஞ்சம் பொறுக்கட்டன்" இந்த நேரத்திலும் முருகேசுவிடம் வாங்கி சாப்பிடுவதற்கு சொர்ணம்மாவின் சாதி அகங்காரம் இடம் கொடுக்க வில்லை. முருகேசுவிற்கும் அது விளங்காமல் இல்லை. இருந்தாலும் பிள்ளைகளின் முகத்தை பார்த்ததும் மனம் கேட்காமல் "அம்மா தேத்தண்ணி வைச்சுத்தாறன" கேட்டான். "வேண்டாம் வேண்டாம் முதலில எங்களுக்கு ஒரு கொட்டில் போடவேணும் இஞ்சினேக்கை இல்லை. கொஞ்சம் தூரமா. இஞ்சருங்கோ

முருகேசனிட்டை மரம், தடி, கிடுகு வாங்க காசு குடுங்கோ.. நீங்கள் றோட்டடிக்கு போய் இரண்டு மூண்டு பாத்திரங்களும், தேவையான சாமான்களும் வாங்கியாருங்கோ"சொர்ணம்மா கட்டளை இட்டுக் கொண்டிருந்தாள்.

— வண்ணைதெய்வம்


VILLENEUVE ST. GEORGES இல்

# மனோஸ்டோர்ஸ்

மனிகைப்பொருட்கள
புதுப்புது வடிவங்களில்
ஆடைத்தேர்வுகள்
சிறுவர்களுக்கான உடைகள்

கொம்பக்றடிஸ்க்குகள்
ஓடியோ கெசற்றுக்கள்

புதிய பழைய படங்களின்
வீடியோப்பிரதிகள்
*விற்பனைக்கும் வாடகைக்கும்*
**அனைத்தும் மலிவுவிலையில்**
பெற்றுக்கொள்ள

# MANO STORE

**30 RUE DE PARIS**
**94190 VILLENEUVE ST. GEORGES**
(S.N.C.F- VILLENEUVE)

# கின்னஸ் புத்தகம்.

உலகத்திலேயே பைபிளுக்கு அடுத்த படியாக அதிகஅளவில் வெளியாகும் நூல் எது என்று கேட்டால் தயங்காமல் சொல்லக்கூடிய ஒரு பெயர் கின்னஸ் புத்தகம் என்பதே. ஒவ்வொரு மனிதரும் ஏதாவது ஒரு துறையில் சாதனைபடைத்து புகழ் பெறவே ஆசைப்படுகின்றனர். ஒவ்வொரு வருடமும் உலக அளவில் சாதனை புரிந்தவர்களின் பெயர் பட்டியலை தாங்கி வருவது கின்னஸ் புத்தகம். ஒவ்வொரு வருடமும் புதிதாக சாதனை புரிந்தவர்களின் பெயர்கள் சேர்க்கப்படுகின்றது. பழைய சாதனைகள் முறியடிக்கப்படும் போது பழையவர்களின் பெயர் நீக்கப்படுகிறது. சாதனைகளை விட உயரமான மலை, நீளமான நதி போன்ற இயற்கை சம்பந்தப்பட்ட விடயங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் இந்த விபரங்கள் மாறாமல் அப்படியே இருக்கும். .கின்னஸ் புத்தகம் 1955ம் ஆண்டு ஆவணிமாதம் 27ம் திகதி ஆங்கிலேயரான சேர் ஹூக் பீவர் (SIR HOOK PEEVAR) என்பவரால் ஆரம்பிக்கப்பட்டுஅன்றிலிருந்து இன்றுவரை பிரதியாண்டும் வெளிவந்து கொண்டு இருக்கிறது. இது தோன்றியது கூட சுவாரசியமான கதைதான். ஹூக் ஒரு வேட்டைப்பிரியர். இவர் ஒருதடவை வேட்டையாட போனபொழுது பறவையொன்றை குறிவைத்து சுட்டபோதும் அது தப்பிப்போய்விட்டது. ஐரோப்பாவிலே மிக வேகமாக பறக்கும் பறவை அதுதானா என்பதை கண்டறியச் சொன்னார். தொடரந்து ஒவ்வொரு துறையிலும் இப்படி விரைந்து செயற்பட்டுச் சாதனை புரிபவர்களை கண்டறியச் சொன்னார். பிரித்தானிய மதுக்கடைகள் எல்லாம் இதுபற்றிய வாதப்பிரதிவாதங்களில் இறங்கியது. பலன் பலரது முயற்சி உலகம் முழுவதும் உள்ள சாதனை விபரங்கள் பார்வையில் பட்டது. ஆச்சரியமான பல விடயங்கள் வெளியானதில் எல்லா நாட்டுமக்களும் ஆர்வங்காட்டினார்கள். விற்பனை இன்று கொடிகட்டிப் பறக்கிறது. இந்த புத்தகத்தில் பெயர்பொறிக்க வேண்டுமென்ற ஆவலில் பலர் சாதனை புரியவும் ஆரம்பித்துவிட்டனர். இதில் என்ன என்ன விடயங்கள்தான் பதியப்படும் என்ற வரைமுறை இல்லை. உயிரை பணயம் வைத்து சாதனை புரிய ஆர்வமுள்ளவர்கள் துடிப்புடன் செயல்படுகிறார்கள். ஆனால் ஒற்றைக்காலில் நிற்றல் போன்ற உபயோகமற்ற சாதனைகளும் நிகழ்த்தப்பட்டு வருவதுதான் கொடுமை.

# கலைவாழ்வில்.....

கலைஎன்பது மனித உணர்வுகளின் இனியராகம். ஆக்கபூர்வமான உண்மைகளின் இயல்பான வெளிப்பாடு கலைகளில் ஈடுபாடு உடையவர்கள் கவலைகளை மறக்கின்றனர். கலைஞனும் ரசிகனும் ஒரு புள்ளியில் இணைகின்ற நிலையில் அனுபவபூர்வமாக அனைவராலும் ஒப்புக் கொள்ளப்படும் விடயம் கலை கவலைமறந்து மனிதனை மகிழவைக்கும். தனக்கு பிடித்த பாடல், அபிமான எழுத்தாளனின் எழுத்துகள், அபிமானத்துக்குரிய நடிகனின் நடிப்பு என கலையை ரசிக்கும் ரசிகன், தன் ஈடுபாட்டிற்குரிய வெளிப்பாடுகளில் லயித்துப்போகிற கலைஞன் இருதரப்பாருமே மகிழ்ச்சி அடைகிறார்கள். மனது இறுக்கம் தளர்ந்து லேசாகிப்போகிறது. இது ஒரு வித்தியாசமான தெய்வீக உணர்வு.

உலகில் கலைத்துறையில் ஈடுபடுவோர் அதிக பணம் சம்பாதிப்போராயும், அடுத்த வேளை உணவுக்கு அல்லல்படுவோராயும் இருவேறுபட்ட நிலைகளில் இருக்கிறார்கள். எந்த நாட்டினரும் தமது கலையை வளர்த்தெடுக்க பாடுபடுகின்றனர். அரசாங்கங்களும் உதவுகின்றன. பிரான்ஸின் செவாலியே, (இந்த விருது சென்ற ஆண்டு தமிழ் நடிகர் சிவாஜிக்கு வழங்கப்பட்டது.) அமெரிக ஒஸ்கார் போன்ற விருதுகள் கலைத்திறனை கௌரவிப்பதாகும். பிரான்ஸின் முக்கிய இடங்கள், வீதிகள், ரயில் நிலையங்கள் எங்குமே கலைஞர்களின் பெயர்கள் சூட்டப்பட்டிருப்பதை காணலாம். அத்தனை மரியாதை தங்கள் கலைஞர்கள் மீது அவர்களுக்கு.

எங்கள் கலைஞர்களும் கலைவளர்க்க பெரிதும் பாடுபடுகிறார்கள். இடம் பெயர்ந்தும் இயந்திரத்தனமான ஐரோப்பிய வாழ்க்கையிலும் வழக்கம்போல பெருளாதார பிரச்சனைகளோடும் முயற்சிக்கிறார்கள்.

நடனம், நாடகம், இசை, எனபவற்றோடு இன்று திரைப்படத்துறையும் பங்குபெறத்தொடங்கிவிட்டது. சில சோதனையை தந்ததும் சில நம்பிக்கையூட்டுவதும் நடந்திருக்கிறது. ரசிகரும், கலைஞரும் தமது எதிர்பார்ப்புகளையும் முயற்சிகளையும் தொடர்ந்துகொண்டு இருக்கிறார்கள். நாங்களும் எமது ஆதரவை வழங்கி,சரியான விமர்சனங்களை கொடுத்து வளர்க்க முற்படவேண்டும்.வளர்ந்துவிட்ட ஏனைய நாட்டு கலைஞர்களை போன்று.....

(தொடர்ச்சி 46ம் பக்கம்)

# குறள்பக்கம்

அரசியலில் புகழ் பெற்றிருந்தாலும் கலைஞர் கருணாநிதியின் உரைநடைத்திறன் அவரது நாவன்மையை போலவே தனித்தன்மை வாய்ந்தது. பொய்யாமொழியாம் திருக்குறளை கற்றோர் அன்றி பாமரரும் புரிந்துகொள்ளும் வகையிலே சிறுசிறு கதைகளோடு குறளோவியம் என்னும் எழுத்தோவியத்தை படைத்திருக்கிறார். அதிலிருந்து ஒரு ஓவியம் உங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு இருக்கறது.



## அழுக்காறு

தாத்தா அதோ தள்ளாடி, தள்ளாடி நடந்து போகிறாரே! அவர் யார்? ஆளைப்பார்த்தால் கட்டுடல் வாய்ந்தவராக காணப்படுகிற்! ஆனால் நடையில் ஏன் இந்த தளர்ச்சி? பேரன் கேட்டான். அவரா ஆள் வலுவானவர் மட்டுமல்ல, அறிவுநூல்களை கூட கற்றவர்! ஆயினும் அவர் தடுமாற்றத்தோடு நடப்பதற்கு காரணம் இல்லாமல் இல்லை. தூக்க முடியாத சுமையை தூக்கிக்கொண்டு செல்கிறார். அதனால்தான் தள்ளாடிடும் நிலை என்று பேரனுக்கு முதியவர் பதில் அளித்தார்.

இளைஞன் அல்லவா!

அத்துடன் அவனுக்கு மனநிறைவு ஏற்படவில்லை. என்ன தாத்தா அந்த மனிதர் தலையில் எந்தச்சுமையையும் காணவில்லையே? நீங்கள் அவர் பளுவை தூக்கமுடியாமல் திண்டாடுவதாக கூறுகிறீர்களே!

திண்டாடுவதாக கூறுகிறீர்களே! என்று கிழவரை மடக்கினான். தளிர் பருவம் உனக்கு! அதனால் அந்த மனிதர் தடம்மாறி நடப்பது உனக்கு தெரியவில்லை. அறவழியிருக்க அதனை விடுத்து பிற வழியினில் அவர் செல்வது ஏன் என்று எனக்கு தெரியும். அவர் சுமந்திருக்கிற மூட்டைகளின் அழுத்தத்தால் அவர் கால்கள் பின்னுகின்றன. எனவே அறவழியை விடுத்து எங்கே செல்கின்றோம் என்று தெரியாமல் கால்கள் செல்லும் திசையில் சென்று கொண்டிருக்கிறார்.

கொஞ்சம் விளக்கமாக சொல்லுங்கள் தாத்தா! என்ன சுமை? என்ன மூட்டை? ஏன் அவற்றை அவர் வீணாக சுமக்கிறார்? அந்தச் சுமை எதுவும் என்கண்ணுக்கு தெரியவில்லையே!

கண்ணுக்கு தெரியாது! ஆனால் அறிவுக்கு புலப்படும் அந்த பெரும் சுமை! சொல்கிறேன் கேள்! ஒரு பொருளின்மீது மனிதன் விருப்பங்கொள்வது—அல்லது ஆசைப்படுவது இயல்பு! ஆனால் அதை அடைவதற்காக எததகைய குறுக்குவழிக்கும் அவன் தயாராகிக் கொள்கிறான் என்றால், அந்த ஆசை அவனை மனித சமுதாயத்தின் மதிப்பை இழக்கச் செய்து அவன்தலையில் பெரும் சுமையாக ஏறி உடகார்ந்து கொள்கிறது. அப்படிப்பட்ட ஆசையை இதோ அந்த மனிதர் சுமந்து கொண்டு நடக்கிறார். தன்னுடைய தனிப்பட்ட ஆசாபாசங்களுக்காக தன்மானத்தை இழக்க தயாராகி விட்டாரே என்று விபரமறிந்தோர் வியந்தனர்.

அவர்களை கண்டு அவர் கொண்டசினம் மலைபோல் உருவெடுத்தது! அந்தச் சினமெனும் பெரும் சுமையையும் தூக்கிக கொண்டு நடக்கிறார். எப்படியிருந்த மனிதர் இப்படி ஆகிவிட்டாரே எனறு அவருக்காக இரக்கப்பட்டவர்கள் மீது கடுஞ்சொற்களை வாரியிறைத்தார். அந்தக் கடுஞ்சொற்கள்: யானையானது தன் தலையில் தானே மண்ணை அள்ளிப்போட்டுக் கொண்டது போல்—அவர்தலைக்கே மற்றுமோர் சுமையாக வந்து சேர்ந்தது! இத்தனை சுமையுடன் எப்படி அவரால் அறவழியில் பயணம் செய்திட முடியும்? அதனால்தான் பாதைதவறி பரிதவிக்கிறார்.

தாத்தா! தாத்தா! அய்யோ அந்த மனிதர் ஆற்றில் விழுந்து விட்டார்! விழுந்தவர் நீந்திடக்கூட முடியாமல் தவிக்கிறார். அதோ பாருங்கள் தாத்தா அவர் ஆற்றில் மூழ்கிக் கொண்டே இருக்கிறார். ஆமாம்! ஆளை காணவில்லை! ஆற்றோடு போய்விட்டார் தாத்தா! அவர் வீழ்ந்துவிட்ட ஆறு என்ன ஆறு தெரியுமா? அதுதானப்பா அழுக்காறு! அதில் விழுந்த

யாரும் தப்ப முடியாது! எந்த ஆற்றில் விழுந்தாலும் ஒருவேளை தப்பிவிடலாம். -இந்த அழுக்காறு இருக்கிறதே: இதில் விழுந்து பிழைத்தார் யாரும் இல்லை.

தாத்தா அழுக்காறு என்றால் என்ன?

அதுதானப்பா அடுத்தவன் வாழ்வதை பார்த்து -அடுத்தவன் புகழப்படுவதை பார்த்து- அடுத்தவனின் அறிவாற்றல், வீரம், உறுதி இவற்றை பார்த்து பொறாமை கொள்ளுதல்! அதற்குப் பெயர்தான் அழுக்காறு! அதனால்தான் வள்ளுவர் பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கு சுமைகளையும் சுமக்காமல் நடந்தால் அறவழியில் எளிதாக செல்லலாம் என்று கூறியிருக்கிறார்.

தாத்தாவின் விளக்கம் கேட்டு பேரனின் விழிகள் ஒளி சிந்தின.

''அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்''

அதிகாரம் 4. அறன்வலியுறுத்தல் பாடல்35.

---

## அனுபவம் பேசுகிறது

கவலை நம் சவப்பெட்டிக்கு ஓர் ஆணி சேர்க்கிறது
கலகல என்ற சிரிப்பு ஒரு ஆணியை கழற்றுகிறது
ஜான் வோல்ஸ்காட்

பழிவாங்கும் குணம் முதலில் இனிக்கும்
ஆனால் கொஞ்ச நேரத்தில் கசப்பாக மாறிவிடும்
இது எய்தவனையே திருப்பி தாக்கிக் கொல்லும்
ஆயுதமாகும்
மில்டன்

எவன் ஒருவன் தொழில் முறைகளை அதிகமாக சிந்திக்கிறானோ, அவன்மனதில் பணம் காய்க்கும் கல்மிரிஸ் மரம் வளர்கிறது என்று அர்த்தம்

# என்று தணியும் இந்த சுதந்திர தாகம்




" அம்மா இந்த ஜக்கெற்றை களட்டி விடுங்கோ" அருந்ததியின் நான்கு வயது மகன்தான் சொன்னான். "சீ சும்மா இரு தம்பி! பஸ் வருகுது, களட்டினா காதுக்குள்ளால குளிர் போய் வருத்தம் வரும். பிறகு டொக்டரிட்டை போய் ஊசி போடவேணும்" மகனை பயம் காட்டினாள் அருந்ததி. ஊசி என்றால் அத்தனை பயம் மகன் அமரனுக்கு. அவன் பேசாமல் ஜக்கெற்றோடு இணைத்த தொப்பியில் இருந்த கையை எடுத்தான். மகனை பரிதாபமாக பார்த்தாள் அருந்ததி. "அம்மா இந்த தொப்பி கட்டினது கழுத்துக்கை நோகிற மாதிரி இருக்கு" அமரனின் கண்கள் கலங்கியிருந்தது. அருந்ததி மெதுவாக கட்டை இளக்கினாள். அவளது இதயமும் இளகியிருந்தது.

நான் டொச் படிக்கிறன் தானே?" குளிரினால் நடுங்கிய வண்ணம் தாயை கேட்டான். "தமிழ் தான் எங்கட மொழி, டொச் படிச்சு என்ன செய்யப்போறா? இது கிழமையில ஒருநாள் நடக்கிற வகுப்பு எண்டாலும இதுதான் எங்களுக்கு முக்கியம்" அமைதியாகவும் அன்பாகவும் கூறிமுடித்தாள் அருந்ததி. அம்மா அந்தா பஸ் வந்திட்டுது நான் புஷ் (push) பண்ணப் போறன்" உற்சாகத்தோடு ஓடிய மகனை இழுத்துப்பிடித்தாள். "அங்கே பனி உறைஞ்சு இருக்கு, அம்மாவின் கையை பிடித்துக் கொண்டு வரச்சொல்லி

எத்தனை தரம் சொல்லுறது" அன்போடு ஆனால் கண்டிப்புக் கலந்து சொல்லிக் கொண்டாள் மகனுக்கு. பரிதாபமாக தாயின் கையை பிடித்துக்கொண்டு அமரன் பஸ்ஸில் ஏறி அமர்ந்தான்.

தமிழ்ப் பாடசாலையில் மகனை விட்டுவிட்டு மீண்டும் பஸ்சுக்காக காத்திருந்தாள் அருந்ததி. மனதில்தான் எத்தனை எண்ணப் படலங்கள். பிறந்த மண்ணில் சுதந்திரமாக இருக்க முடியவில்லை, வாழமுடியவில்லை. அப்பா, அம்மா, உடன்பிறப்புகள், இனசனங்களோடு வாழ்ந்த இனிமையான நாட்கள் நிலவில் முற்றத்து மல்லிகைப் பந்தலின்கீழ் பேசிய, சிரித்து விளையாடி மகிழ்ந்த நாட்கள் எல்லாம் கனவாகிவிட்டன. அவை நிஜமாகி எப்போது மீண்டுவரும்? பிறந்த மண்ணில் எப்போது சுதந்திரமாக வாழப்போகிறேன். அன்னிய மண்ணில் இருந்துகொண்டு சொந்த மண்ணை நினைத்து ஏங்கும் நிலை எந்த இனத்திற்கும் வரக்கூடாது. ஈழத்தமிழினத்தோடு முடிந்து விடவேண்டும் என்று எண்ணினாள். ஏக்கம் பெருமுச்சாக வெளிவந்தது.

சுவீஸ் வந்து ஐந்து வருடங்கள் ஓடிவிட்டன. அருந்ததியை பொறுத்த மட்டில் ஐம்பது வருடங்களாக தோன்றியது. இங்கு ஒரு அகதியாக ஒரு மரணதண்டனைக்கைதி போல் தன்வாழ்க்கையே தனக்கு சுமையாக வாழ்ந்துகொண்டிருக்கிறாள். அன்பிற்கும் ஆசைக்கும் என ஒரு மகனும், மகளும் அவள் வாழ்வை கொஞ்சம் நேசிக்க வைக்கிறார்கள். மரண தண்டனை நிறைவேற்றப் படும் நேரத்தில் குற்றவாளியின் கடைசி ஆசையை கேட்பது போல வாழ்வு முடியப்போகும் கடைசி நிமிடத்தில் காலதேவன் உனது இறுதி ஆசை என்ன என்று கேட்டால் நான் பிறந்த மண்ணில் உருள ஆசை என்றுதான் கூறுவாள். இறுதிமுச்சு எங்கள் தமிழீழக்காற்றில் கலந்துவிட வேண்டும் என்பதுதான் அவளது தீராத ஆசை

"பஸ் போட்டுது போலை, இண்டைக்கு சனிக்கிழமை, அடுத்ததுக்கு இன்னும் பத்து நிமிசம் நிக்க வேணும். கொஞ்சம் நடந்தா மற்ற பஸ்ஸில போகலாம்" சொல்லிக் கொண்டே ஏனைய தமிழ் பெற்றோர்கள் சென்றுவிட்டனர். நின்ற இடத்திலேயே நின்றாள் அருந்ததி. அவர்களின் உற்சாகமும் அவளிடமில்லை. தாய் நாட்டிலேயே அதை தங்கவைத்துவிட்டாள். மார்கழி மாதம் பாலன் வரவை பறைசாற்றி நட்சத்திர மின்விளக்குகள் மின்னியது. மாட்டுத் தொழுவங்கள், யேசுவின் திருவுருவங்கள் என மிக அலங்கரித்திருந்தார்கள். தேவாலய மணிகளும் காதை செவிடுபடுத்திக் கொண்டிருந்தது. அருந்ததி வசிக்கும் இடத்தை சுற்றி அடிக்கொரு

தேவாலயம் அமைந்திருந்தது. கொஞ்ச நாட்களாகவே இருளை விரட்டிவிட்டோம் என்று மின்விளக்குகள் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தன.
முகங்களிலும் மகிழ்ச்சி. கிறிஸ்மஸ், புதுவருட கொண்டாட்டங்களை எண்ணி நாடே சுறுசுறுப்பாகியிருந்தது

எங்கும் பனி கொட்டியிருந்தது. பாரதியின் "வெள்ளிப்பனிமலை" கவிதை ஞாபகத்துக்கு வந்தது. பனியோ குளிரோ இங்கு வாழும் மக்களுக்கு பழக்கப்பட்டிருந்தது. பனியூடு அவர்கள் நடந்து கடந்த காலடித்தடங்கள் ஏற்படுத்திய அடையாளங்களை பார்க்க அவளது கிராமத்தில் நிகழ்ந்த அனர்த்தனங்களை நினைவுபடுத்தியது. இராணுவம் புகுந்து பசுமையோடியிருந்த வயல்களை நாசப்படுத்தி அவள் கிராமத்து மக்களை சித்திரவதை செய்து, எத்தனை கொடிய, கசப்பான அனுபவங்கள் அவை.

பாலன் பிறப்பும் புதுவருடமும் வாணவேடிக்கையும், வெடிச் சப்தங்களும் பாலன் நிச்சயம் இந்த நாட்டில்தான் பிறப்பானோ என அருந்ததியை எண்ண வைத்தது. இத்தனை கொண்டாட்டங்கள் இயற்கையின் ஆர்ப்பாட்டமான மாற்றங்கள் எல்லாம் அவள் மனதை மாற்றிவிடவில்லை. கிறிஸ்மஸ், புதுவருட பனிக்கால காலையின் ஆர்ப்பாட்டங்கள் அவளுக்கு சங்கோடு சேர்ந்தொலிக்கும் திருவெம்பாவைப்

பாடல்களை ஞாபகப்படுத்தியதில் மனது ஊருக்கே சென்று விடுகிறது. யாழ்ப்பாண கிராமம்
ஒன்றில் பிறந்தவள்தான் அருந்ததி. இல்லையெனும் ஒருசொல்லையே கேட்கமுடியாத, வசதியான விவசாயிகள் நிறைந்த எத்தனை அழகான கிராமம். நீர்வளம், நிலவளம் நிறைந்த அந்த கிராமத்தில் துள்ளித்திரிந்த இளமைக்காலம்தான் எவ்வளவு மகிழ்ச்சியானது. அத்தனையும் சிங்கள இராணுவத்தின் ஒரேநாள் வெறியாட்டத்தில் சிக்கி உருக்குலைந்து— அப்பா, தம்பியோடு சேர்த்து இன்னும் பலரை பலிவாங்கி இராணுவத்தின் கைகளில் சிக்கிய அவர்களின் பாசறையாகிவிட்ட அந்த கிராமம் இன்னும் விடுபடவில்லை.

வீட்டு முன்னால் இருக்கும் பூங்காவின் பூக்களை, பசுமையான புல்வெளியை கணவன் ரசிப்பான். " என்ன அழகான பூக்கள் இவை, ரசிக்க எத்தனை விசயங்கள் இருக்கு. நீ இதையெல்லாம் விட்டிட்டு வீணாக கவலைப்பட்டு, ஐஞ்சு வருசத்தில் பத்து வயது கூடினமாதிரி இருக்கு" அவள் அவற்றை ரசிக்காமல் இருப்பதாக குற்றம் சொல்வான். என்னதான் அழகென்றாலும் வீட்டு

முற்றத்தின் மல்லிகைப் பந்தல் அவளே ஆசைப்பட்டு உருவாக்கியிருந்த பூந்தோட்டம் இதெல்லாம் ரசித்தது போல இங்கு ரசிக்க முடியவில்லையே?

"என்னடி பஸ் வாறது தெரியாமல் அப்பிடி யோசினை" அகிலாதான் கேட்டாள். "ஓ அகிலாவே ஏது இஞ்சாலை" என விசாரித்தாள் அருந்ததி. பஸ்ஸினுள் கதைப்போம் என்று சொல்லிக்கோண்டே ஏறினாள் அகிலா. தமக்கையின் பிள்ளையை அழைத்து வந்ததாக சொன்னவள் அருந்ததியின் யோசனைக்கான காரணம் கேட்டாள். பிள்ளைகளுக்கு ஏதும் சுகவீனமா? என தானாகவே விசாரித்தாள். ஊர் நினைவுகளில்மூழ்கிப் போயிருந்ததை சொல்லும்போதே அருந்ததியின் கண்கள் கலங்கியிருந்தது. "உன்ர குடும்பம், என்ர குடும்பம் ஏன் இன்னும் எத்தனையோ சனம் அழிஞ்சு சிதைஞ்சு போச்சு, இரத்த வெறி படிச்ச மண்.

எனக்கு நாட்டை நினைச்சால் ஆமியும், சூட்டுச்சத்தமும், குழறல் சத்தமும்தான் ஞாபகத்துக்கு வரும். அதாலை நான் அதுகளைப்பற்றி நினைக்கிறேல்லை. எனக்கு திரும்பி போகவும் மனமில்லை. இங்க கிடைக்கிற வசதியள் இனி அங்க கிடைக்கப் போறதுமில்லை வந்து இவ்வளவு காலத்துக்கு பிறகும் ஊரை நினைச்சுக் கொண்டு உன்னை மாதிரி நான் ஒருதரையும் காணேல்லை." அகிலா பேசி முடிக்கும் வரை பேசாமல் இருந்தாள். இப்படி எத்தனை பேர். தங்கக் கூண்டுகளில் சிறைப்படுவதைவிட சோலைக் கிளியாக இருப்பதைத்தான் அருந்ததி விரும்புகிறாள். ஆபத்துகள் இருந்தாலும் சுந்திரமும் இருக்குமே. " அகிலா வெறி மண்ணுக்கில்லையடி சிங்கள அரசுகளுக்கும், அவர்களின் ஏவல் இராணுவத்திற்கும்தான். வீணாக எங்கட மண்ணில பழி சுமத்தாதை! இந்த விசயங்கள் பற்றி கதைச்சா இரண்டு பேருக்கும் ஒத்துவராது. வேண்டாம் நான் உன்னோடை சண்டை பிடிக்க வரேல்லை உன்ர கலியாண வீடு எப்ப?" கேட்டாள் அருந்ததி.

அகிலா தனக்கும் தனது வருங்காலக் கணவருக்கும் இடையே திருமணத்திற்கு தாலிக்கொடி இருபது பவுணிலா, இல்லை இருபத்தைந்து பவுணிலா செய்வது என்பதில் ஏற்பட்ட பிரச்சனையை பற்றி பெருமையாக சொன்னாள். அது மட்டுமல்லாமல் அருந்ததியிடம் ஆலோசனையும் கேட்டாள். பதில் ஏதும் சொல்லாமல் இருந்ததற்காக அருந்ததியில் அகிலாவுக்கு கொஞ்சம் கோபம் கூட ஏற்பட்டிருந்தது. ஒவ்வொரு வருக்கும் எத்தனையோ பிரச்சனைகள். சிலருக்கு இப்படியும் ........

பிரச்சனைகள் எண்ணிகொண்டே பஸ் ஸிலிருந்து இறங்கிக் கொண்டாள்அருந்ததி.
அரைகுறையில் சமையலை நிறுத்திவிட்டு பக்கத்து வீட்டு நண்பியிடம் இரண்டு வயதான மகளையும் அவளுக்குத் தேவையான பால், அவசர தேவைக்கு மாற்றுடைகள் என்பவற்றை கொடுத்துவிட்டு மீண்டும் மகனை அழைத்துவர புறப்பட்டாள். மழை தூறிக்கொண்டிருந்தது. உடைகளின் அழுத்தத்தோடு மகன் படும் கஸ்டத்தை பார்க்க அவளுக்கு பரிதாபமாக இருந்தது. குளிரால் வந்தது இவ்வளவும். ஊரில் இப்படியா? அம்மாவை கண்டதும் மகிழ்ச்சியோடு ஓடிவந்தான் அமரன். "அம்மா இஞ்ச பாருங்கோ கச்சான், சொக்களா, தோடம்பழம் எல்லாம் கிறிஸ்மஸ் தாத்தா தந்தவர்" ஆர்வமாக சொன்னவன் அம்மாவின் கட்டளைக்கு பணிந்து தன் சிறிய குடையை விரித்துக் கொண்டான். தொடர்ந்தும் கொப்பி, பென்சில், பொம்மை என்று ஏதோவெல்லாம் அன்று கிறிஸ்மஸ் தாத்தாவின் கொடையைப்பற்றி கூறிக்கொண்டிருந்தான். பஸ்வந்து இருவரும் ஏறி அமர்ந்த கொஞ்ச நேரத்தின் பின் தான்கேட்டான். "அதுசரி அம்மா, அகதி எண்டா என்ன?" அவள் எந்த வார்த்தையை காதால் கேட்பதற்கு இந்த ஐந்து வருடங்களில் வெறுத்து வந்தாளோ
அதை இயல்பாக கேட்டுவிட்டான். அவனைப்பொறுத்த வரை தமிழில் ஒரு புதுவார்த்தை, அதன் ஆழமோ, இழிவோ அவனுக்கு புரியப் போவதில்லை. அர்த்தம் புரிந்து கொள்வதற்கிடையில், அல்லது தெரிந்து கொள்வதற்கிடையில் நாடுதிரும்பிவிடலாம் என்ற நினைப்போடு நாட்களை கழித்து வந்தவளுக்கு திடுக்கிட வைத்தது இந்த கேள்வி. "அம்மா நான் கேக்கிறன், நீங்கள் ஒண்டுமே சொல்லாம இருக்கிறீங்கள்" அவனது சிணுங்கல் அவளை சுயநிலைக்கு கொண்டுவந்தது. "சத்தம் போடாதை எல்லாரும் எங்களைத்தான் பாக்கினம்" என்று சொல்லி மகனது காதில் லேசாக முறுக்கினாள் அருந்ததி. தனது மனக்குமுறலை மகனிடம் காட்டுவது பிழையென்று தெரிந்தாலும் தாய்நாட்டை விட்டு இங்கு வந்ததுமுதல் அதிகமாக கோபப்படுகிறாள். அவளது கோபம் கண்டால் அமரன் அமைதியாகி விடுவான். இப்பொழுதும் எதுவும் பேசவில்லை. பஸ் தரிப்பில் நின்றது. இறங்கினார்கள். அதிகம் பேர் அந்த தரிப்பில் ஏறியிருக்கவேண்டும். அவிழ்ந்திருந்த காலணிக்கயிற்றை சரிசெய்துகொண்டிருந்ததில் அருந்ததி ஒன்றும் கவனிக்கவில்லை"அம்மா! அம்மா!! ஆனா (அ) எல்லாஇடமும் பஸ்ஸில போப்போகுது. எய்யா!

கெய்யா!!" என்று அமரன் துள்ளிக்குதித்தான். குளிரில் ஆவி படிந்திருந்த பஸ்ஸின் கண்ணாடியில் "அ" அழகாக எழுதப்பட்டிருந்தது. "அம்மா! இது நான் எழுதின ஆனா வடிவாஇருக்கா? இது அழியுமே அம்மா? சொல்லுங்கோ அம்மா" மகிழ்ச்சி பொங்க கேட்டான்.

"இல்லையடா எங்கட ஆனா ஒருநாளும் அழிஞ்சுபோகாது அது உலகம் முழக்க ஒலிக்கும்" ஏதோ ஒரு வெறியோடு சொன்னாள். "அம்மா ஆனா மழை பெஞ்சா அது சத்தம் போடுமாம்மா ?" விழிகளை விளித்து வியப்போடு கேட்டான் அமரன். இல்லையென்றாள் சிறு தலையசைப்பில். "அம்மா நீங்க தான சொன்னீங்கள் உலகமெல்லாம் ஒலிக்குமெண்டு" கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா? மகனது புத்திக்கூர்மையை நினைத்து தாய்மை உணர்வில் மெய்மறந்து போனாள் அருந்ததி. தான் உணர்ச்சி வசப்பட்டு சொன்னதற்கு விளக்கம் கேட்கிறானே? மகன்.

"வா கடைக்கு போட்டு போவம் அப்பனுக்கு என்ன வேணுமோ வாங்கித்தாறன்" மனதும் சிரிக்க சொன்னாள். அம்மா சிரித்ததில் இனி காதுக்கு முறுக்கு தரப்போவதில்லை எனும் மகிழ்வோடு அமரன் மீண்டும் கேட்டான் "அம்மா அகதி எண்டால் என்ன?" மகனின் கண்கள் இன்னுமொரு முறை தண்டித்துவிடாதே எனும் கெஞ்சலுடன் இருப்பது தெரிந்தது. அமரன் எதையும் இலகுவில் மறந்து விடமாட்டான். இப்போது சொல்லாவிட்டால் சாப்பிடும் பொழுதோ, தூங்கும் பொழுதோ சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் கேட்பான் என்று தெரியும்.

"அமரன் நாங்கள் இப்ப இருக்கிறது எங்கடை நாடில்லை, எங்கட இடம் யாழ்ப்பாணம். அது தமிழீழத்தில இருக்குது. அங்க இப்ப எங்களிலை இருந்து துணிச்சலோடை வெளிக்கிட்ட போராளியளுக்கும் இலங்கை ராணுவத்துக்கும் இடையிலை சண்டை நடக்குது. சிங்கள ஆமியள் ஊருக்கை வந்து வெட்டிக்கொட்டி, சுட்டு சாக்கொண்டதாலையும் நாங்கள் துணிச்சல் இல்லாததிலையும் இஞ்சை ஓடிவந்திட்டம். நாடு திரும்ப கிடைச்ச உடனை திரும்பி அங்கை போவம், போகவேணும்." "அப்ப நீங்க ஆமிக்கு பயந்து உங்கடை ஊரைவிட்டிட்டு இஞ்ச ஓடி வந்தனிங்களே?" துணிச்சலுடன் கேட்ட நான்கு வயதுச் சிறுவனின் கேள்வியில் கூனிக்குறுகிப் போனாள் அருந்ததி. அப்பிடி இல்லை இப்ப எங்கடை ஊரிலை ஆக்கள் இல்லை! ஆமிமட்டும்தான் இருக்கிறான்கள். அதுதான் அப்பாவோட இங்க வந்தனான்" அருந்ததி சமாளித்தாள். "அம்மா நாங்க

இருக்கிற வீடும் எங்கட இல்லையா"ஏக்கத்துடன் கேட்ட மகனுக்கு "எங்கட வீடு யாழ்ப்பாணத்திலை இருக்குது. இப்ப போகேலாது, கொஞ்ச காலத்திலை போவம் பிள்ளைக்கு இப்ப என்ன வேணும்? கண்டோஸ், சுவிங்கம், பிஸ்கெற் " என கேட்டாள். அம்மா இதுதான் என்று மகன் காட்டியதை பார்த்ததும் மனது அதிர்ந்தது அருந்ததிக்கு. இத்தனை நாளும் மகனோடு எத்தனையோதடவை கடைக்கு சென்றிருக்கிறாள். அப்போதெல்லாம் இனிப்புவகைகள், விளையாட்டுப பொருட்கள் என கேட்கும் மகன் இன்று துப்பாக்கி கேட்கிறான். அது தண்ணீர் விட்டு விளையாடுவது. "அமர் இப்ப குளிர்காலம் வேண்டாம். வேற ஏதாவது எடு, பபிள்கம் இனிப்பு இதை பிறகு வாங்குவம்" என மகனை சமாதானப்படுத்தியும் அவன் சம்மதிக்கவில்லை. அதுதான் வேண்டுமென்று அவன் படுத்திய பாட்டில் வாங்கிக்கொடுத்து வீட்டுக்கு வந்தனர். அதன் பிறகு அவன் துவக்கிற்கு தண்ணீர் விடு அது இது என்று எந்த தொல்லையும் கொடுக்கவில்லை.

மகளை தூக்கிக் கொண்டு வந்து சமையலறைக்குள் சென்று விட்ட சமையலை தொடர்ந்தாள். மகளுக்கு உணவு ஊட்டிக் கொண்டிருந்த பொழுது யாரோ அழைப்பு மணியை அழுத்தும் சத்தம் கேட்டது.

கீழ் வீட்டு சுவிஸ்கார பெண்மணி. என்ன விடயம் என்று ஜெர்மன் மொழியிலே விசாரித்தாள். "உங்கள் பிள்ளை தொம், தொம் என்று சத்தம் போடுகிறான். கொஞ்சம் அமைதியாக விளையாட சொல்லுங்கள். பெருந்தன்மையுடன் அமைதியாக சொல்லி சென்றாள். அருந்ததிக்கு ஆத்திரமாக இருந்தது அமரன்மீது. இரண்டு அடி போட்டால் தான் சரி. தான் நினைத்தபடி இப்பொழுதே நடக்கிறானே என்று கோபத்தோடு சென்றாள்.

இவனால் இந்த வீட்டை விட்டு எழுப்பிவிட்டால் என்ன செய்வது என்ற பயமும் கூடவே வந்தது. நல்ல இடம், குறைவான வாடகை. மனத்தில் கோபம் பொங்க சென்றவள் அவன் விளையாடிக்கொண்டிருந்த வரவேற்பறையை அடைந்ததும் திடுக்குற்றாள். நான்கு வயது மகன் அந்த விளையாட்டுத் துப்பாக்கியை முதுகில் சுமந்து இராணுவ நடை நடந்துகொண்டிருந்தான். அவன் துள்ளித்துள்ளி இராணுவநடை நடந்ததுதான் அவர்களின் பலகை வீட்டில் அத்தனை சத்தமாக கேட்டது. "அமர் என்ன இது கீழ்வீட்டுக்காறி வந்து பேசிப்போட்டு போறாள்" கண்டித்த தாயை பார்த்து சொன்னான். "அம்மா நான்

ஆமிக்காரரை சுடப்போறன். அவங்களை சுட்டாத்தான் உங்களையும் கூட்டிக்கொண்டு எங்கட ஊருக்கு போகலாம். எங்கட வீட்டில இருக்கலாம். இப்பிடி குளிர் இல்லை எண்டு சொன்னீங்கள் அங்க போனா ஜக்கெற் போட தேவையில்லை" முதுகுப்புறம் இருந்த துவக்கை எடுத்து சுடு, சுடு என்பது போல பாவனை செய்துகொண்டிருந்தான். வீடியோப்பிரதிகளில் பார்த்ததை அப்படியே செய்தான். ஆத்திரத்தில் அடிக்கப் போன அருந்ததியின் தாய் மனம் இப்போது ஆனந்தத்தில் நிரம்பி வழிந்தது. பிள்ளையை அலங்கரித்து போர்க்களத்திற்கு அனுப்பிவிட்டு மகன் நெஞ்சிலே கணைதாங்கி வீரமரணம் அடைந்தால் ஆனந்தக்கண்ணீர் விடுவாளாமே சங்ககால புறநானூற்றுத்தாய் அந்தத்தாயின் நிறைவு இப்போது அருந்ததியின் நெஞ்சிலும் பரிணமித்தது. என் மகனும் நாட்டை காக்கப் போகும் வருங்காலவீரன் என அவளின் தாய்மனம் பெருமை கொண்டது.

அவளது சுதந்திர தாகத்தை, விடுதலை உணர்வை, அன்னிய மண்ணில் முளைவிட்டிருந்தாலும் என் மகன் தீர்த்து வைப்பான் என்ற நிம்மதி பிறந்தது. அவள் புதிய நம்பிக்கையோடு அமைதியாக தன் கடமைகளை தொடர்ந்தாள்.

திருமதி: அம்பிகா இராஜலிங்கம்.
(சுவிஸ்)

**விருந்து வந்தால்.......**

வீட்டிற்கு வரும் "விருந்தாளிகளை கைகழுவிவிட்டு வா, குளித்துவிட்டு வா" என்றெல்லாம் கூறாதீர்கள். ஏதோ இதுவரை அவர்கள் குளித்ததில்லை, சாப்பிடமுன் கையே கழுவியதில்லை என்பது போல் அர்த்தப்படும். வீணாக மனக்குறையை ஏற்படுத்தும்.பிரச்சனை எதற்கு?

விளம்பரங்கள் செய்து பத்திரிகைத்துறையில் **கதலி** பிரவேசிக்க அதரவு தந்த வார இதழான **பாரிஸ் ஈழநாடு**,ஜெர்மனில் இருந்து வெளியாகும் மாதஇதழ் **இளைஞன்** இருமாதங்களுக்கு ஒன்றாக வெளிவரும் **பூவரசு** பத்திரிகைகளுக்கு கதலி தன் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

# என் முதுகுக்குப் பின்னால்!



பாரிசிலிருந்து சுவீஸ் (Lauvzanne) லவுசான் மாநிலத்தை நோக்கி நோக்கிப் போகும் அந்த அதிவேக மின்வண்டி (T-G - V)புறப்படுவதற்காக கூவிய இறுதி வேளையில் அந்த மனிதர் ஓடிவந்து ஏறிக்கொண்டார். மிகவும் வியர்த்திருந்தது.தனது பிரயாணச்சீட்டின்படி இருக்கையை தேடிக்கொண்டு வந்தவர் எனக்கு முன்னால் இருந்த இருக்கையில் அமர்ந்து தன் எண்ணை உறுதிப்படுத்திக் கொண்டார். தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டு கைப்பையில் இருந்த தண்ணீரை அருந்தியவாறே என்னைப் பார்த்து சினேகமாக புன்னகை ஒன்றை சிந்தினார். நானும் பதிலுக்கு சிரித்தவாறே கையில் இருந்த புத்தகத்தை படிப்பதை தொடர்ந்தேன். சிறிதுநேரம் என்னையும் என் கையிலிருந்த புத்தகத்தையும் உற்று நோக்கியவர் "இந்தியனா? "என பிரஞ்சு மொழியில் விசாரித்தார். இல்லை ஸ்ரீலங்காஎன்றேன்.

அவருக்குப்புரியவில்லை இலங்கையை பிரெஞ்சில் சிலான் (ceylan)எனவே அழைப்பது நினைவுக்கு வர அவ்வாறே சொன்னதும் புரிந்து கொண்டவர் தான்சுவீஸ் லவுசான் மாநிலத்தை சேர்ந்தவன் என்றும், பாரிஸில் தொழில் புரிவதாகவும், தற்போது விடுமுறையில் குடும்பத்தாரிடம் செல்வதாகவும் நான் கேட்காமலே சொல்லி முடித்தவர் என்னை எங்கே போகிறாய் என்றும் வினவினார்

ஒருபுறம் எரிச்சலாக இருந்தாலும் சுவீஸிலுள்ள எனது நண்பன் வீட்டிற்கு போவதாக சொல்லி வைத்தேன். "ஆமாம் ஆமாம் தற்போது இலங்கைத் தமிழர்கள் ஐரோப்பா எங்கும் பரவிவிட்டார்கள" ஒருவித ஏளனத்துடன் சொன்னவர் ஆனால் இலங்கைத் தமிழர்கள் சிறந்த உழைப்பாளிகள் என்றொரு பாராட்டிதழையும் தந்தார்.

புத்தகத்தை படித்துக்கொண்டும் இயற்கையை ரசித்துக் கொண்டும் பிரயாணம் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்துடன் வந்த என்னை இந்த மனிதர் குழப்பிவிடுவார் போலத்தோன்றியது. தொடர்ந்து பேசிக்கொண்டேயிருந்தார். "உனக்குத் தெரியுமா? ஜக் ஷிராக்

அணுஆயுதப் பரிசோதனையை முடித்து விட்டார். சிறிது காலத்தில் அமெரிக்கர்கள் போல் பிரெஞ்சுக்காரர்களும் உலகின் முதல் மனிதர்களாகி விடுவார்கள்" என்றார். இதற்கு நான் என்ன பதில் சொல்ல போகிறேனோ என்ற ஆர்வம் அவர் முகத்தில் இருந்தது.

"முதல் மனிதர்களாவது குறித்து சந்தோசம் ஆனால் அவர்கள் மனிதத்தை தொலைத்துவிடாது இருக்க வேண்டும். இன்று யுத்தமும் பிரச்சனைகளும் இல்லாத நாடு எங்காவது உண்டா? மக்கள் எங்கே நிம்மதியாக வாழ்கிறார்கள். எல்லா இடத்திலும் பஞ்சம், பசி, பட்டினி, நோய், மரணங்கள், யுத்தம். அச்சுறுத்தல் இல்லாது எந்தமனிதன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்?" ஒரு நீண்ட பிரசங்கத்தின் மூலம் என் கேள்வியை முன்வைத்தேன்.

என்னை நன்றாக உற்றுப் பார்த்துவிட்டு "நீங்கள் ஜெகோவாவின் சாட்சிகளில் ஒருவரா" என்று கேட்டார். நான் இல்லை என்று தலையசைத்தவாறே எனக்கு மனிதம்மீதும் இந்த பூமியின் இயற்கையோடு ஒன்றிணைந்த மனித வாழ்க்கை மீதும் அளவில்லாத காதல் உண்டென்றேன். ஒரு நீண்ட பெருமூச்சின்பின் சொன்னார். "உண்மைதான் யுத்தம் மிகவும் கொடியது ஜேர்மனியருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் நடந்த யுத்தத்தில் என் முன்னோர்கள் பட்ட துன்பங்களை என்தந்தை சொல்வதுண்டு. எனது பாட்டனாரை நாசி இராணுவம் இராணுவ வாகனத்தில் நசித்து அரைத்து கொன்றதாகவும் அதை தனது தந்தையாரே நேராகக் கண்டதாகவும் சொன்னார். அச்சம்பவத்தை சொல்லும் போது அவர் மிகவும் துடித்துப் போய்விடுவார் "என்றார்.

என்னையறியாமல் எனதுகண்கள் கலங்கின. "நீ ஏன் அழுகிறாய்? நான் ஏதும் தவறாக சொல்லி விட்டேனா "என்றவர் எனது கரங்களை ஆறுதலாக பற்றினார். இல்லை எனக்கு யாழ்பாணத்தில் நடந்த சம்பவங்களும் நடந்து கொண்டிருக்கிற சம்பவங்களும் நினைவுக்கு வருகின்றன. கொலை வெறிபிடித்த இந்திய ஆக்கிரமிப்புப் படைகளால் எங்கள் தேசத்து பிஞ்சுகள் கூட கவச வாகனங்களால் அரைத்துக் கொன்றதும், படித்தவர் களையும் அறிவுஜீவிகளையும் தேடித்தேடி அழித்ததும் நினைக்கும்போது.......

இன்னும் இனஅழிப்புகளில் ஈடுபட்டுவரும் ஸ்ரீலங்காராணுவத்தால் எம்மக்கள் கொலைசெய்யப் படுவதும்.......என் வார்த்தைகளும்.. .கண்ணீரும் சூடாகிப்போனது

அந்த மனிதரும் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து போனார். சிறிது நேரம் கழித்தே என்னோடு பேசினார். "எனக்கு அறுபது வயதாகிறது. தொழிலில் இருந்து ஓய்வு பெறும் வயது. அறுபதுவருடகால புவியியல் வாழ்க்கையில் அவசரமான வாழ்க்கையுடன் போட்டி போடுவதிலேயே என்னை தொலைத்து விட்டேன். குறிக்கோளில்லாத ஐரோப்பியனைப் போல் மது, மாது, கேளிக்கைகள், பின் ஒப்புக்கு ஒரு திருமணம், இயந்திரமாக நான்கு பிள்ளைகள், எல்லாவற்றுடனும் தான் போராடிவிட்டேன். ஆனால்.. எனக்கு அப்பால் என்னை இவ்வளவுக்கு உள்ளாலும் அச்சுறுத்திக கொண்டிருக்கிற யுத்த வெறியனை காணத்தவறிவிட்டேன். யுத்த வெறியர்கள் உருவாக்கிய இனவாதத்தையும் பாசிசத்தையும் புரிய மறந்துவிட்டேன். உண்மைதான்... யுத்தம் கொடியது எத்தனைகோடி மனிதஉயிர்களை அதுதினமும் விழுங்குகிறது என்பதை தெரிந்துகொள்ள மறுத்து நானும் அதற்கு உடந்தையாகி விட்டேனோ என என் உள்மனம் அச்சம் கொள்கிறது. ஏனென்றால் கறுப்பர்களை பலதடவை ஏளனம் செய்திருக்கிறேன். அராபிய இளம் அகதிப்பெண்களுடன் பலாத்காரமான பாலியல் உறவுகளை ஏற்படுத்தியிருக்கிறேன். உயர்பதவி வகிக்கையில் வியட்நாமிய அகதிகள் மீது பாராமுகம் காட்டியிருக்கிறேன். அதை இப்போதுதான் உணர்ந்துகொண்டிருக்கிறேன" என்றார்.

அவர் தன் உள்மனதை அப்படியே என்னிடம் ஒப்படைத்தது எனக்கு வியப்பை ஏற்படுத்தியது. தன்னை லேசாக்கிக் கொண்டவர் தொடர்ந்தார். "நான் தற்போது இனஅழிப்பு யுத்தங்களுக்கு எதிராக குரல் கொடுப்பதில் முன்னின்று வருகிறேன். அதுசம்பந்தமாக நூலொன்றையும் எழுதிவருகிறேன். அதன்பெயர் என்ன தெரியுமா? .....என் முதுகிற்குப் பின்னால்.... இன்று ஒவ்வொரு மனிதனுக்கு பின்னாலும் ஒரு உயிரழிக்கும் ஆயதம் நீட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது" என்றார்.

புகையிரதம் லவுசான் புகையிரத நிலையத்தை வந்தடைந்தது. அப்புதிய சினேகிதரிடம் விடைபெற்றுக்கொண்டு வெளியே வந்தேன். தூரத்தே சுவிற்சர்லாந்தின் எழில்மிகு மலைப்பிரதேசங்கள் என் மனதை நிறைத்தது. ஆனால் முதுகிற்குப்பின்னால் ஏதோ குறுகுறுப்பது போன்ற உணர்வு எனக்கு தோன்றிக்கொண்டே இருந்தது.

* * *

ரமேஸ்சிவரூபன்

## வருங்காலம்

இரக்கமற்றது
இருபதாம் நூற்றாண்டு
மனிதனுக்கும், ஆயுதத்திற்கும்
காதல்!
யுத்தக்குழந்தைகள்
கருத்தரிக்கிறது.
சுதந்திரம் பயந்துவாழ்வதால்
மனிதநேயத்திற்கு தட்டுப்பாடு
பாவம் இயற்கை
ஆயுத செடிகள் வேர்விடுகிறது.
கொலைவியாபாரிகளுக்கு
கொள்ளை லாபம்,
மரணத்திற்கு கொடிய தாகம்.
காலம் மாறி ஆயுதஉறவுகள்
மரணித்து மண்ணில் கரையும்.
சுதந்திர உணர்வுகளின்
விதை துளிர்விட்டு,
அமைதியும் உண்மையும்
காய்த்து கனியாகும்.
உலகத்தில் வருங்கால
மனிதர்களாவது!!
இயற்கையை கெடுக்காமல்
வாழ்க்கையை அனுபவிக்கட்டும்.

மணிகண்டன்

# கவிதை ப



## புரியாத புதிர்கள்.....

என் இதயக்குவிவாடியில் குவிந்த
உன் அழகிய பிம்பம்
இன்று பல கோணங்களாய்
தெறிப்படைந்து சென்றது ஏன்? நீ
காதலித்தது என்னை அல்ல
என்கவிதையை என்று
எனக்கு புரியாமல் இருந்தது ஏன்?
நேற்று வரை உன் விழிகள்
என் விழிகளை நோக்கியல்லவா
விழித்திருந்தது.
இன்று நீ. விழிகளை மூடி
மௌனமானது ஏன்?
கல்லூரி வாசலில்
கால்வைத்ததும் உன்
பாதம் பதிந்த அதேசுவட்டில் நானும்
பாதம் பதித்தேன்

கொய்கை கண்ணன்

# டு குயிலே



அப்போதும். நீஎன்னைகொள்ளை
கொள்ளாமல் இருந்தது ஏன்?
உன்நினைவுகளை மட்டும்
எனக்குள் புதைத்துவிட்டு
நீ தனியாக பிரிந்து சென்றது ஏன்?
அன்று நீ அனுப்பிய
காதலுக்குரிய விண்ணப்பம்
இன்று என் கைகளுக்கு கிடைத்தது.
அதில் நீ என்னை வள்ளுவனின்
ஒரு குறளுக்காய் உவமித்திருந்தாய்.
உன் இதயத்திற்காய் உவமிக்கவில்லை!
ஆனால் நான் உன்னை என்
இதயத்துக்கல்லவா
உவமித்துக்கொண்டிருக்கிறேன்.

*என் தேசம் புத்துணர்ச்சியோடு*
*விடிவுக்காய் முயல்கிறது.*
*இயந்திரங்களோடு நான்.*
*இயந்திரமாய் தேய்ந்து*
*நேரத்தை அடகுவைத்து*
*கூடவத்தடை பெற்ற குயிலாய்*
*முகவரியை தொலைத்த கடிதமாய்.*
*கற்பனைகளில் காலங்கடத்தி*
*தங்கக் கூண்டில் வாழும்*
*ஈழத்தமிழ் அகதி நான்*

**பபிலா**

# சீட்டுக்கட்டிலிருந்து ஒரு தத்துவம்.



சீட்டாட்டம் என்றாலே சீட்டுப் பிரியர்களுக்கு கொண்டாட்டம். (சில குடும்பத்தலைவர்களின் சீட்டுப்பைத்தியத்தால் குடும்பங்கள் அழிந்துபோன சம்பவங்களும்உண்டென்பது வேறுவிடயம்).ஆனால் சீட்டாட்டம் ஒரு நேரங்கொல்லி, சூது என்று வெறுப்பவர்கள் இன்னொருபக்கம். இந்த சீட்டுக்கட்டு ஒரு ஆன்மீகவாதியின் பார்வையில் பட்டிருக்கிறது. அவர் பார்வை எப்படியிருக்கிறது தெரியுமா?

சீட்டுக்கட்டிலே உள்ள கறுப்பு நிறம் இரவினையும், சிவப்பு நிறம் பகலையும் குறிக்கிறது.

ஐம்பத்திரண்டு எண்ணிக்கை வருடத்தில் உள்ள மொத்த வாரங்களை குறிப்பிட, அவை முழுவதிலும் இருக்கும் முன்னூற்று அறுபத்தைந்து முத்திரைகளும் முன்னூற்று அறுபத்தைந்து நாட்களை குறிப்பிடுகிறதாம்.

1. ஒன்றே தெய்வம். (ஏஸ்)
2. ஆத்மா, பரமாத்மா.
3. திரி(மூன்று)மூர்த்திகள்.
4. நான்கு திசைகள்.
5. ஐம்பூதங்கள்.
6. ஆறு பருவங்கள்.
7. ஏழு(ஸப்த)ரிசிகள்.
8. எட்டு(அட்ட)திக்கு பாலகர்கள்.
9. ஒன்பது(நவ) கிரகங்கள்.
10. பத்து(தச) அவதாரங்கள்.

இதில் அடங்கியுள்ள குறியீடுகள் சர்வசமயங்களின் சங்கமத்தை குறிப்பிடுகின்றதாம் இனியொரு சந்தர்ப்பத்தில் சீட்டுக்கட்டை கண்டால் , அல்லது விளையாடினால் அவரது தத்துவங்கள் ஞாபகத்திற்கு வருகிறதா பாருங்கள்.

தொகுப்புஙவிக்னா.

# இலக்கு




அருச்சுனன், துரியோதனன் ஆகிய அரசகுமாரர்களுக்கு போர்க்கலை பயிற்றுவித்தவர் துரோணர் எனும் குரு. துரோணருக்கு தன்மாணவர்கள் எந்தளவிற்கு வித்தை கற்றிருக்கிறார்கள் என்பதை பரிசோதிக்கும் எண்ணம் வந்தது. இருவரையும் ஒரு வசதியான இடத்திற்கு அழைத்துச் சென்றார்.

முதலாவதாக ~~அருச்சுனனை~~ துரியோதனை அழைத்தார். "துரியோதனா அதோ தெரியும் மரத்தைப்பார், அதன் கிளையில் ஒரு புறா இருக்கிறதே, அதன் வலதுகண்ணை குறிவைத்து நீ அம்பை எய்யவேண்டும்" என்று சொன்னார். அவனும் சரியென்று தலையசைத்தான். தொடர்ந்து அம்பை எடுத்து குறிவைத்தான். துரியோதனனை துரோணர் கேட்டார். துரியோதனா இப்போ உனக்கு என்ன தெரிகிறது. குருவே மரம் தெரிகிறது, கிளை தெரிகிறது, புறாதெரிகிறது, அதன் வலதுகண்ணும் தெரிகிறது" என்றான். "சரி அம்பைவிடு" என்று அவர் ஆணையிட்டதும் வில்லைவிட்டு பறந்தது அம்பு. ஏதோ ஒரு கிளையை காயப்படுத்திவிட்டு விழுந்தது.

அடுத்தாக அருச்சுனனை அழைத்தார். துரியோதனனுக்கு சொன்னது போலவே கட்டளையிட்டார்.

அவனும் தன் அம்பறாத்துணியிலிருந்து அம்பொன்றை எடுத்து குறிவைத்தான். அப்பொழுது துரோணர் துரியோதனனிடம் கேட்டது போலவே கேட்டார். "அருச்சுனா என்ன தெரிகிறது"

மரம் தெரிகிறதா? இல்லை. கிளை தெரிகிறதா? இல்லை. பறவை தெரிகிறதா? இல்லை. அப்படியென்றால் என்ன தெரிகிறது. "குருவே ஒரு கண்தெரிகிறது. தலையசைத்தால் புறா இறந்துவிடும் என்பது துரோணருக்கு புரிந்துவிட்டது. அவனது இலக்கு சொன்ன குறியில் லயித்துவிட்டதாலேயே அவனுக்கு மரமோ, கிளையோ, அல்லது புறாவின் முழுஉருவமோ தெரியவில்லை. தன்மாணவன் மீது கொண்ட பெருமிதத்தோடு வித்தியாசாலையை நோக்கி நடந்தார் துரோணர். விபரம் புரியாமல் பின்தொடர்ந்தான் அருச்சுனன்.




## வரைபடங்கள்.

சரித்திரத்தில் முதலாவது வரைபடம் 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டது.முன்னாளில் எகிப்திய நிலப்பிரபுக்கள் தங்கள் நிலங்களின் எல்லைகளை குறிப்பாக தெரிந்து கொள்ளவும் அரசர்கள் தமது தேச எல்லைகளை குறித்துக் கொள்ளவும் வரைவித்துக் கொண்டார்கள். காகிதம் கண்டுபிடிக்கப்படாத அந்தக் காலத்தில் மண்ணில் வரைந்து சூளையில் இட்டுக் காயவைத்து பாதுகாத்துக்கொண்டார்கள். அதனை பாதுகாப்பதும் தேவையானபோது அவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளவும் முடியாமல் இருந்தது. ஆனால் இப்பொழுது விமானத்தில் பறந்து பகுதி பகுதியாக படம்பிடித்து விஞ்ஞானத்தின் உதவியோடு இலகுவாக வரைந்து கொள்கிறார்கள்.

# மலர இருக்கும் திரைமலர்கள்.




புலம் பெயர்ந்தோர் கலை வெளிப்பாடுகளில் தற்போது திரைத்துறையும் முக்கியம் பெறத்தொடங்கிவிட்டது. எந்த சமூகங்களிலும் இளைஞர்களின் பங்களிப்புகள் ஈடுபாடுகள் ஆரோக்கியமானதும் அவசியமானதும் ஆகும். அந்த வகையில் முழுமையும் இளைஞர்களின் கூட்டு முயற்சியில் *ஜீவன்* உருவாகி வருகிறது.

ஜீவனோடு அறிமுகமாகும் இளையவர்கள்

க(தை)தா நாயகனாக ஸ்ரீராமன், இவரோடு மகேந்திரம், மைக்கேல், சகிந்தன், நிரஞ்சன், கவிநயா, திலீப், பிரேம் இவர்களோடு பாரீஸின் முன்னனி நட்சத்திரங்களான அம்பிகா, சுனேகா இன்னும் பலர் நடிக்கிறார்கள்.

உயிரினங்களின் என்றும் மாறாத ஜீவ உணர்வான காதலைவைத்து

இந்த கம்பியூட்டர் யுகத்திலும் காதல் அழியாது எனும் கருவில் அமைத்து, இயக்கி வருபவர் எஸ். வி. சுதன்ராஜா(இவரும் அறிமுகந்தான்) எனும் இளைஞர்.

ஜீவனின் தரத்தை நோக்கி பின்னணியில் நின்று உழைக்கும் புதியவர்கள்.

ஜீவனோடு நாதம் படம்பிடிக்க, அகிலசேகர் பின்னணி இசைக்கிறார்.

*"SOMETHING NICE"* எனும் விளம்பரத்தோடு *ஜீவனை*

கதிரவன் பிக்சர்ஸ் தயாரித்து வருகிறது.

"தலைமுறையில் இருந்து"



ஐரோப்பா நோக்கி ஈழத்தமிழர்கள் அகதியாக இடம்பெயரத்தொடங்கி இரண்டு தசாப்தங்கள் முடியப்போகிறது. சமூகத்தின் ஒருபகுதி இந்தப்புதிய நடைமுறைகளோடும், கட்டுப்பாடற்ற ஐரோப்பிய நாகரீகங்களோடும் முட்டிமோதி குழம்பிப்போய் தட்டுத்தடுமாறி நிற்பதும் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. அதில் ஒருபகுதியான புகலிட நாடுகளில் வாழ்ந்துகொண்டிருக்கும் எங்கள் இளந்தலைமுறையின் வாழ்வியல் முரண்பாடுகள் பற்றி சொல்கின்ற திரைப்படம்தான்

## தலைமுறை

இதற்கான கருவமைத்து திரைக்கதை எழுதி நெறியாண்டிருப்பவர் ரமேஷ்சிவரூபன். படத்திற்கான வசனங்களை எஸ். ரி. சில்வஸ்ரர் எழுதியிருக்கிறார். கதையை ஒளிப்பதிவு செய்திருப்பவர் சுதன் உதவி சுகந்தன். இசை அறிமுக இசைஅமைப்பாளர் சந்திரன் வானதி, எழிலரசி, ராம், பகீரதன் போன்ற அறிமுக நடிகர்களோடு மொறிஸ்கிறிஸ்டி, அம்பிகா, தோழர் சுரேந்திரன் மற்றும் பாரிஸின் ஐம்பதுக்கு மேற்பட்ட முன்னணிக்கலைஞர்களும் பங்கு கொள்கிறார்கள். இரா குணபாலன், றெமீசியஸ், யாழ்தேவன், ஜே.ஏ. சேகர், சண்முகநாதன் ஆகியோர் கௌரவ வேடங்களில் தோன்றுகிறார்கள். ஜெய்சினி ஆட்ஸ் சார்பில் தலைமுறையை தயாரிக்கும் முத்துஜெய்சிங் சிறப்பு வேடமேற்று நடித்துள்ளார். தலைமுறை திரைக்காவியம் எதிர்வரும் புரட்டாதிமாதம் ஐரோப்பாவெங்கும் திரையிடப்படுகிறது.

கிறகெறி தங்கராஜாவின்

# பாசப் பூக்கள்

பல நாடகங்களை இயக்கி அனுபவம் வாய்ந்த கிறகெறி தங்கராஜா கலைக்கோயில் சார்பில் உருவாக்கி வரும் திரைக்காவியம். ஒரு கலைஞனின் பாசப் போராட்டத்தை மையமாக கொண்டு திரைக்கதை அமைத்து இயக்கி வருகிறார். இசைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இப்படத்திற்கு ஈழநிலா இசையமைக்க. கவிஞர்கள்: கிறிஸ்டியன்,அருந்ததி, சிவலிங்கம் சிவபாலன், தீரன், ரமேஸ் சிவரூபன் ஆகியோர் பாடல்களை எழுதுகிறார்கள். ஒளிபதிவு, ஒளித்தொகுப்பு கலைவாணி பாலா.

*கலை:* சாம்ஸன்

*உதவி இயக்கம்*
பொலிஸ் அருணகிரி

*இணை இயக்கம்*

*இணை தயாரிப்பு:* எஸ். பிலிக்ஸ், மனோதாஸ்

> உலகில் நாம் காணும் எல்லா ஆக்க வேலைகளும்
> மனித ஊக்கத்திலிருந்து தோன்றியவையே.
> விவேகானந்தர்

புலம் பெயர்ந்த எங்கள் சிறார்களின் தமிழ்மொழியறிவை விருத்தி செய்யும் நோக்கில் தமிழர் ஒன்றியம்(O.I.D.T)04-05-01996முதல் **தமிழ்ச்சோலை** எனும் பெயரில் ஒரு பாடசாலையை அமைத்து சேவைபுரிய ஆரம்பித்துள்ளது. இவற்றோடு இன்னும் பரதநாட்டியம், ஆங்கிலம் என்பனவும் பயிற்றுவிக்கப் படுகின்றது. சங்கீதம், வயலின், மிருதங்கம் ஆகியவற்றிற்கான வகுப்புகளும் விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. தமிழ் பெற்றோர்கள் யாவரும் பிள்ளைகளின் எதிர்காலத்தை கவனத்தில் கொண்டு பயன்பெற வேண்டுகிறோம்.

கடிததொடர்புகளுக்கு:

செயலாளர் : 60-78-27-19
பொருளாளர்: 60-77-45-23

O.I.D.T
தமிழர் ஒன்றியம்
53,Rue de l essone
Les Aunettes
91000Evry

# சிறுகதை ஒரு நோக்கு......

ஏனைய விடயங்களைப் போல படைப்பாளனின் கற்பனைக்கு ஏதும் வரம்புகள் இருக்கிறதா? இல்லை எந்த விடயத்தையும் கருப் பொருளாகக் எழுத்தாளனுக்கு சுதந்திரம் உண்டு.ஆனாலும் தான் சார்ந்த சமூகத்தின் அன்றாடப் பிரச்சனைகளை கருவாக்கும் போதுதான் அவன்பேனா உயிர்பெறுகிறது. ஆரேக்கியமாக எதிர்காலத்தை கற்பனைசெய்து படைக்கும் பொழுது அவனுக்குரிய மரியாதை கிடைக்கிறது. இலக்கியங்கள் என்பவை எப்பொழுதும் சமகால மக்களை மகிழுவித்து உணர்வூட்டவும் எதிர்காலத்தவர்கள் குறித்த ஒருகாலத்தில் என்ன நிகழ்ந்திருக்கறது என்பதை அறிந்து கொள்ளக்கூடிய ஒரு பதிவாகவும் இருந்துவருகிறது. ஆகவேதான் இலக்கிய வடிவங்களில் ஒன்றான சிறுகதைக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படாவிட்டாலும் சில மரபுகள் பின்பற்றப்படுகின்றன.

சிறுகதைகள் அதிக வர்ணனைகள் இல்லாததாக இருப்பதனால் சுருங்கவிளங்க வைக்கவேண்டிய கட்டாயம் எழுத்தாளனுக்கு உண்டு. சுருக்கமாக என்பதற்காக வாசகனுக்கு விளங்கவைக்க முடியாத எழுத்தில் பலனிருக்காது. சிறுகதைகள் தொடக்கம் முதல் முடிவு வரைக்கும் அசாதாரண வேகத்தில் நகர்வதும், சொல்லும் விடயங்களும், இலகுவான மொழிநடையுமே வாசகனை கதையோடு பின்னிவிடும் இழைகள். சிறுகதைகள் பல்வேறு நடைகளில் எழுதப்படுகின்றன. கதாசிரியரின் கூற்றாக அதாவது பிறிதொருவர் கதையை நகர்த்தி செல்லுதல், அல்லது அந்த குறிப்பிட்ட கதையில் வரும் பாத்திரமொன்றே மற்றைய பாத்திரங்கள் கதையின் கருப்பொருள் பற்றி கூறிச்செல்லல், உரையாடல் வடிவில் எழுதுதல் என அவை வேறுபடும்.உரையாடல் வடிவில் இன்றி வேறுவகைகளில் கதைநகர்த்தும் ஆற்றல் உள்ளவர்களுக்கு உரையாடல் தேவைப்படுவதில்லை.உரையாடலே இல்லாத சிறுகதைகளும், முற்றுமுழுதாக உரையாடல் வடிவிலமைந்த சிறுகதைகளும் உண்டு. இவை எழுத்தாளனின் திறமையை பொறுத்த விடயம். இன்னும் கதைநடக்கின்ற பிரதேச மொழி வழக்குகள், காலக்குறியீடுகள், என்பன கதையுள் வெளிப்படுவது இன்னும் அழகு சேர்க்கும். பிரதேச மொழி வழக்கு வாசகனுக்கு நெருக்கத்தை கொடுக்கும். பிரபல எழுத்தாளர்களின் கதைகளை

படிக்கும்போது இதை அவதானிக்கலாம்.

சிறுகதை வடிவத்திற்கு இன்று ஏறக்குறைய நூற்றைம்பது வயதாகிறது. அமெரிக்கரான ''எட்கர் அலன் போ'' என்பவர் அதிகமான கதைவடிவங்களை எழுதிமுடித்தபின்னர் உலக அறிஞர்கள் சிறுகதையை தனியான ஓர் இலக்கிய வடிவமாக ஏற்றனர். பாட்டிசொன்னகதை, கர்ணபரம்பரை(செவிவழி)க்கதை என கதை வடிவங்கள் செய்யுள், உரைநடை வடிவில் நிலவிவந்தாலும் அவை சிறுகதை வடிவங்களாக ஒப்புக்கொள்ளப் படவில்லை. எட்கர் அலன்போ, ஓஹன்றி, மாப்ஸான், செகோ போன்றவர்கள் எழுதப்படாத ஒருமரபை தொடர்ந்து எழுதியவையே சிறுகதை கதைஇலக்கியமென அங்கீகாரம் பெற்றன. இன்று உள்ள இலக்கணங்களின் படி அன்றைய சிறுகதைகள அமைந்திருக்கவில்லை. ஒரு கதையின் சுருக்கமே சிறுகதை என்பதுபோல நிர்ணயிக்கப்பட்டது. அரைமணிமுதல் இரண்டுமணி நேரத்துக்கு உள்ளாக உள்ள காலவரையறையுள் படித்து மகிழக்கூடியதாக இருக்கவேண்டும் என்பது எட்கர் அலன்போவின் கருத்து.ஆனால் இன்று ஐந்துமுதல் பதினைந்து நிமிடத்திற்குள் வாசித்து மகிழக்கூடிய கதைகள் வெளியாகின்றது. பிற துறைகள் போலவே இதுவும் சிறுகதைக்கு வளர்ச்சிசேர்க்கும் அம்சம்தான். செய்யுள் இலக்கியம் சிறந்திருந்த தமிழிலும் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் சிறுகதை இலக்கியம் வளர ஆரம்பித்தது. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பன்மொழி அறிஞரான வ.சு ஐயரின் சிறுகதைகளே தமிழில் இலக்கிய உணர்வோடு மேற்கொண்ட சிறுகதை முயற்சிகளென கருதப்படுகிறது. ஆயிரத்து தொழாயிரத்து முப்பதுகளில் எழுத்தாளர்களுக்கான எழுத்தாளர் என பெயர்பெற்ற (பிரான்ஸிய எழுத்தாளரான மாப்ஸானின் கதைகளை ஆரம்பத்தில் தழுவியும் மொழிபெயர்த்தும், தழுவியும் பல சோதனைமுயற்சிகளை மேற்கொண்டு வெற்றி பெற்றவர் ) புதுமைப்பித்தன், தனக்கென்று ஒரு தனிநடைகொண்டு உள்ளுணர்வுகளை உயிர்த்துடிப்போடு மிகுந்த மரியாதை கொடுத்திருப்பது கவனிக்க வேண்டியது. எண்பதுகளை தொடர்ந்து ஏற்பட்ட அரசியல், போராட்ட சூழ்நிலைகள் எங்களவர்கள் மத்தியிலும் சமூக பிரதிக்ஞை உள்ள படைப்புகளை வீறுகொண்டெழ வைத்திருக்கிறது. உணர்வுகளை பளிச்சென வெளிப்படுத்தக் கூடிய இலக்கிய வடிவமாக சிறுகதை வடிவம் இருப்பதனால் தங்கள் படைப்புகளுடு தரமான நல்ல கருத்துக்களையும் வெளிப்படுத்த முன்வர வேண்டும். முக்கியமாக வாசகனை வசப்படுத்திக்கொணடால் மட்டுமே கருத்துக்களை தெளிக்கமுடியும் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

## விளையாட்டுக்கு வயது முக்கியமா?

சோம்பலுள்ளவர்கள் பேச சோம்பல்பட்டு தலையசைத்து விடுவார்கள். ஆனால் இந்தியரான அசிஸ்ரோய் (வயுது 63) வயுது போய்விட்டது என்பதற்காக பின்னிற்கவில்லை. பொஸ்டனில் நூறாவது தடவையாக நடைபெறும் 26 கி.மீ மரதன் ஓட்டப்போட்டிக்காக தன்னை தயார்படுத்திக் கொண்டிருக்கிறார். இவர் ஓடத்துவங்கியது ஒன்றும் ஐந்துவயதில் அல்ல. ஆரம்பித்ததே ஐம்பத்திரண்டாம் வயதிலே தான். தினமும் ஒன்றரை மணிநேரமும் ஓய்வு நேரங்களில் அதிக நேரம் பயிற்சி எடுக்கிறார் அந்தமனிதர். இந்த வருடத்தைய பொஸ்டன் போட்டியில் மட்டுமன்றி லண்டனில் நடைபெறும் மரதன் போட்டியிலும் பங்குபற்ற இருக்கிறார். நாற்பது வயுதுக்குமேலாக இருந்தாலும் இருபத்தியெட்டு சர்வதேச மரதன் போட்டிகளில் கலந்து கொண்ட ஒரேஒருஇந்தியர் அசிஸ்ரோய் அவர்களே. அவரே இந்தியாவின் வயதுகூடிய மரதன் ஓட்டககாரர். இவரது இந்த ஆற்றலின் இரகசியம் என்ன என்று கேட்டால் " வெகு இலகு விடாமுயற்சிதான்"என்கிறார் அந்த அறுபத்து மூன்று வயது இளைஞர்.

## அறிந்த புத்தகங்கள் அறியாத விபரங்கள்

புத்தகம் என்றால் அனைவரும் அறிந்ததுதான். கதைகள், நாவல்கள், அறிவியல், என அவரவர் விருப்பத்திற்கு ஏற்ற வகையில் சிலரது வீடுகளிலே சிறிய நூல்நிலையங்களை வைத்திருப்பதும் உண்டு. உலகத்திலே மிகப் பெரிய புத்தகமாக கணிப்பிடப்படுவது நைல்நதிப் பிரதேசத்தில் தேப்ஸ் எனும் இடத்தில் அமையப்பெற்ற மூன்றாம் ருமெசஸ் மன்னனை பற்றிய எழுத்துக்கள் செதுக்கப் பட்ட நினைவு தூபமே. இந்த கல்லெழுத்துப் படிமமான புத்தகத்தின் நீளம் 138அடியாகும். இது மூவாயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்தது. தற்போதைய பெரிய புத்தகமென கருதப்படுவது super book என்பதாகும். 1976 இல் அமெரிக்காவில் கொலரோடா மாகாணத்தில் வெளியிடப்பட்டதாகும். 300பக்கங்களை கொண்ட இந்த புத்தகம் பத்தடி உயரம், ஒன்பது அடி நீளம் கொண்டதாகும். மொத்த நிறை 253 கிலோ கிராம் ஆகும்.

1475ஆம் ஆண்டு வெனிசில் அச்சிடப்பட்ட அன்னை மேரிமாதா பற்றிய தைய்யனை என்ற சிறிய புத்தகமே. இரண்டங்குல அளவான இந்த புத்தகத்தின் அச்சுக்கோர்வை மிகநுண்ணிய அழகான எழுத்துக்களாகும்.

இன்றைய சிறிய புத்தகமென கருதப்படுவது ஜப்பானிய

அசாப்ஹோசியோ வினால் 1980இல் வெளியிடப்பட்ட Arthe Anit ஆகும். சதுரவடிவான இதன் நீள அகலங்கள் 1.18 அங்குலங்களாகும்.

அதிக புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ள இடம் நூல்நிலையம் என்பது பொதுவாக எல்லோருக்கும் தெரிந்தது. ஆனால் ஒரேஒரு நூல்மட்டும் அமைந்த நூல்நிலையமும் இந்தியாவில் உண்டு. இது சீக்கியரின் புனித நூலாகும் இப்புத்தகம் பொன், வெள்ளி எழுத்துக்களால் ஆனது.

(ஆர்ஆர்)

# ஒஸ்கார் விருது

உலகமெங்கும் சினிமாத்துறையில் ஈடுபடும் அனைத்து கலைஞர்களுக்கும் ஒரு இலட்சியம் ஒஸ்க்கார் விருதுதான். இன்று முன்னணியில் இருக்கும் அமரிக்க திரைப்பட துறையை சேர்ந்த முப்பத்தாறு கலைஞர்கள் 1929ம் வருடம் The Academy of Motion Picture and Sciences என்ற பெயரில் ஒரு கலைக்குழுவை அமைத்துக் கொண்டார்கள். இவர்கள் 1929ம் ஆண்டு வைகாசி 16ம் திகதி ஒருவிழாவுக்கு ஏற்பாடு செய்து (wings)விங்ஸ் என்ற படத்திற்கு பரிசினை வழங்கினார்கள்.அப்பொழுது ஒஸ்கார் என பெயரிடப்படவில்லை. தங்கமுலாம் பூசப்பட்ட இந்த வெண்கலச் சிலையை கண்ட மாக்கரட் கெர்ரிக் எனும் திரைப்பட இயக்குனர் என் மாமனார் ஒஸ்கார் மாதிரி இருக்கிறது என்று பலர் முன்னிலையில் வியப்புடன் சொன்னாராம். உடனே ஒஸ்கார் என்றே அந்த சிலைக்கு அதே இடத்தில் பெயரிட்டார்களாம்.

இந்த சிலையின் உயரம் 13.5 அங்குலமும், எடை 17கிலேவும் ஆகும். இந்த சிலையை வடிவமைத்தவர் செட்ரிக் ஹிப்பன்ஸ் எனும் இயக்குனர். இதுவரையில் பென்ஹர் எனும்படம் அதிக (11) விருதுகளை பெற்றுள்ளது.

அண்மையாண்டுகளில் திரையிடப்பட்ட ஜீரசிக் பாக் திரைப்படமும் அதிக விருதுகளை பெற்றுள்ளது. 1960வரை நகைச்சுவைப் படங்களுக்கும் 1967வரை திகில், மர்ம படங்களுக்கும் பரிசளிக்கப் படவில்லை. இன்று ஒஸ்கார் விருதுக்குரிய படங்களை, கலைஞர்களை 3810 உறுப்பினர்கள் கொண்ட குழு தேர்ந்தெடுக்கிறது. தேர்வு முறைகள் சரியானவை என்றும் ஊழல் இருக்கிறது என்றும் இருவகை அபிப்பிராயங்கள் வழக்கம்போல் நிலவுகின்றது.

GOD FATHER படத்திற்காக இந்த விருது வழங்கப்பட்ட போது மர்லின் பிராண்டோ அதனை வாங்க மறுத்துவிட்டார். தமிழ் திரையில்(இந்திய) வருடம் நூற்றுக்கணக்கில் திரைப்படங்களை தயாரித்தாலும் ஒஸ்காரை அண்மித்ததாக தெரியவில்லை. பிகேபி.

# அவள் ஒரு ஜீவன்(ர)

காலை வெய்யிலில் வண்ணக்குடைகள் மிக அழகாக இருந்தன. புத்தகப்பைகள் தாங்கிய வெண்புறாக்களென மெல்ல நடந்து வகுப்பறையை ஆக்கிரமித்தது மாணவிகள் குழு. வெள்ளைச் சீருடையிலும் தேவதைபோல் தெரிந்தாள் ஜீவனா. அழகில் மட்டுமென்றில்லை, படிப்பு, நடனத்திலும் ஏன் அவள் குரல் வளத்தில் கூட முதல்நிலை மாணவிதான். க.பொ.த சாதாரணம் படிக்கின்ற அந்த இருபாலாரும் இணைந்த வகுப்பில் அனைத்து மாணவர்களின் கவனத்தையும் ஈர்த்து வைத்திருந்தாள் ஜீவனா. இன்று நெஞ்சு அதிகப்படியாக துடிப்பது போலதோன்றியது அவளுக்கு. பயம் ஒருபக்கம், காந்தன் விரும்பாமல் ஆசிரியர்களிடமோ அல்லது வேறுயாரிடமோ தெரிவித்துவிட்டால் அவளது



எதிர்காலம் என்னாகும். முடிவு பாரதூரமாக இருந்தால் நினைக்க நினைக்க என்னவோ செய்தது. இன்னும் காந்தனை காணவில்லை. எண்ணதான் படிப்பில் கவனம் செலுத்தினாலும் இயற்கை இருக்கிறதே? அது தன் ஆளுமையிலிருந்து யாரையும் விட்டு வைப்பதில்லை. பருவம் வந்ததும் ஆணோ! பெண்ணோ !!

அதன் வழிநடத்தலுக்கு உட்பட்டேயாகவேண்டும். எத்தனை மாணவர்களை சந்தித்தாலும் காந்தனை காண்கின்ற பொழுதுகளில் மட்டும் அவள் மனது......... பரபரக்கும். மற்றவர்களோடு பேசும்போது வராத கூச்சம் காந்தனை கண்டால் மட்டும் சொற்கள் அடம்பிடிக்கும்

ஆரம்பத்தில் எல்லாரையும் போல் பழகிக்கொண்டிருந்தாலும் நாளடைவில் அவனது தனித்தன்மைகள்

அவளை மெதுமெதுவாக ஈர்த்து விட்டது. அவன் குடும்பம் வறுமையானதாக இருந்தாலும் அவனது பண்பும் பழக்க வழக்கங்கள் விளையாட்டிலும் கல்வியிலும் முன்னணி வகிக்கும் திறமை எல்லாம் ஆசிரியர்களே அவனுக்கு தனிமதிப்பு கொடுப்பார்கள். ஏழ்மைக்குள் வாடினாலும் பிறர்க்கு உதவுகின்ற மனிதாபிமானம் எல்லாம் ஜீவனாவை அவன் மீது பைத்தியம் கொள்ள வைத்தது. எங்கும் ஆண்கள்தான் முதலில் மனதை காட்டுவது. இங்கு கதை மாறியல்லவா இருக்கிறது. நீண்ட நாட்களுக்கு மனத்தில் வைத்து தவித்தாள். மனதை யாரிடமாவது வெளிப்படுத்திக்கொள்ள வேண்டுமே.

ஆனால் முடியவில்லை. இவளது நடபடிக்கைகளை நெருங்கிய வகுப்புத்தோழியான மாலா புரிந்து கொண்டாள்."நீ உனக்குள் ஒளித்துவைத்து வேதனைப் படுவதைவிட எப்படியும் காந்தனுக்கு தெரியப்படுத்திவிடு" என நாள்தோறும் உபதேசம் செய்வாள். அதைக்கேட்டு இரண்டுநாட்களாக எழுத்துக்கூட்டி எழுதுவதுபோல் ஒளித்தொளித்து தன் எண்ணங்களை தாளில் வடித்திருந்தாள். அதை காந்தனது கொப்பி யொன்றை மாலா மூலமாக இரவல் வாங்கி அதனுள் வைத்து திருப்பிக் கொடுத்திருந்தாள். "என்னடி யோசிச்சுக் கொணடு இருக்கிறாய் " குரலிலிருந்து மாலாதான் என அறிந்ததும் திரும்பிப் பார்க்காமலே சொன்னாள். "ஹீரோவை இன்னும் காணணேல்லை அதுதான்" . "ஜீவா நான் பெடியனா இருந்தா உன்னை விடமாட்டன் காந்தன் என்ன கடவிளே எண்டாலும் மறுக்கமாட்டான் யோசிக்காதை" காந்தன் அவளோடு ஒன்றும் வெறுப்போடு நடந்து கொள்பவனல்ல. அதற்காக காதல் என்று எடுத்துக் கொள்ளமுடியுமா? கணிதபாட கொப்பி முடிந்து விட்டிருந்தது ஞாபகத்திற்கு வந்தது.

விடிய அம்மாவிடம் காசும் வாங்கி வந்திருந்தாள். முன்னால் இருக்கும் கடையில் போய் வாங்கிவிடலாம். மணியடிக்க இன்னும் பத்துநிமிடங்கள் இருக்கிறது. கூடவருவதாக புறபட்ட மாலாவை நிறுத்திவிட்டு வேகமாக நடந்தாள். "ஜீவா இனிமேல் இப்பிடி செய்யவேண்டாம். வேறயாரும் எடுத்திருந்தா" கடிதத்தை திருப்பிக் கொடுத்துவிட்டு நடந்தான் காந்தன். கொப்பியையும் மறந்தவளாக விரைந்து தன் இருக்கையை அடைந்துவிட்டாள். மாலாகூட விசாரித்தாள் கொப்பி வாங்காதது பற்றி. ஜீவனா ஒன்றுமே கூறவில்லை.

மாணவர்களோ,

ஆசிரியர்களோ நேரடியாக

அவனிடம் கடிதம் வாங்குவதை கண்டுகொண்டால் என்ன செய்வது எனும் கவலை ஒருபுறம், அவன் கூறிய வார்த்தைகளின் பொருள் விளங்காததில் வந்தகுழப்பம் மறுபுறமுமாக கடிதத்தை சீருடையின் பட்டிக்குள் மறைத்துக் கொண்டு வந்துவிட்டாள். அதை எப்படியாவது பிரித்து பார்க்க வேண்டும். தான் வைத்தபோது இருந்ததை விட கொஞ்சம் பெரிய கடிதமாக இருப்பது போலவும் தோன்றியது. மணியடித்து வகுப்பு தொடங்கியிருந்தது. அசிரியர்கள் மாறினார்கள். அவளது மனம் பாடத்தில் லயிக்கவில்லை. அவனது கடிதத்தையே சுற்றி வந்தது. இரண்டொரு தடவை முயற்சித்த போது மாலாவர மறைத்துக கொண்டாள். உயிர்த் தோழியானாலும் கடிதத்தை காட்ட முடியுமா? எதுவுமே எழுதியிருக்கவில்லை. காந்தன் கண்ணியமாக அவளிடம் திருப்பிக்கொடுத்து விட்டான். அவன் தன்னை வெறுகக்வில்லை என்று தெரிந்தது. மற்றப்படி அவளால் எதுவும் செய்ய முடியவில்லை.

அன்று ஒரு ஞாயிற்றுக் கிழமை. இப்பொழுதெல்லாம் சனி ஞாயிறு தினங்கள் ஏன்வருகிறதோ என்று தோன்றும் ஜீவாவுக்கு. அவன் மறுத்ததும் மனமுடைந்து போய் சிலநாட்கள் இருந்தாள். ஜீவனாவின் மனது அத்தனை விரைவாக காந்தனை மறக்க சம்மதிக்க வில்லை. அவனை

எப்படியாவது தன்மனச்சிறையில் பூட்டிவிட வேண்டும் என்பதே மூச்சானது.

என்ன இப்படி ஒரு காதல் என மாலாவே குறைப்படும் அளவுக்கு ஜீவாவின் காதல் பைத்தியம் முற்றிவிட்டிருந்தது. கணவனை இழந்துவிட்டிருந்த கமலம் அதுதான் காந்தனின் மூத்த சகோதரி அவளது தையல் அந்த ஊருக்குள்ளே பிரபலமானது. அவளிடம் தான் தையல் கற்றுக்கொள்ள விரும்புவதாக தனது தாயிடம் அனுமதி பெற்று அவனது வீட்டிற்கே சென்றுவரத் தொடங்கியிருந்தாள். அவனை காண்கின்ற பொழுதுகளிலெல்லாம் தன்காதலை நினைவூட்டியதிலும், ஓரளவு வகுப்பில் விடயம் கசிந்து நண்பர்களின் கேலிகிண்டல்களும் அவனது மனத்தையும் கொஞ்சம் கரைத்திருந்தது. இந்த தள்ளாத நிலையிலும் தாய் பிறவீடுகளில் எடுபிடி வேலைகள் செய்வதும், சகோதரி மிசினோடு மிசினாக போராடுவதும் அவனை ஆழமாக பாதித்திருந்தது.அதனால்தான் அவன் ஜீவனாவை பற்றி முதலில் சிந்திக்க வில்லை. ஆனாலும்

அவனும் இளைஞன்தானே. அவளது அழகும் ஆற்றலும் தன் மீது கொண்டிருக்கும் தீராத காதலும் இறுதியில் அவள்வழிக்கு வந்துவிட்டான். இருவரும் கடிதமூலமே தொடர்பு கொள்வார்கள். தன் தந்தைக்கு தெரியாமல் காந்தனின் பணத்தேவைகளுக்கும் உதவுவாள். முதலில் மறுத்தாலும் திருப்பி வாங்க சம்மதித்ததும் வாங்குவான். அவர்கள் கடிதங்களில் காதலைவிட குடும்ப விசாரிப்புகள் தான்கூடுதலாக இருக்கும். இருவருமே மற்ற எந்த விடயங்களில் ஒத்துபோனார்களோ பிறருக்கு உதவுவதில் மட்டும் பின்னிற்பதில்லை.

எப்போதாவது பேசுகின்ற ஓரிருநிமிடங்களில் சமூகத்தைபற்றி, நாட்டுவிடுதலை பற்றிய பேச்சுகள் தான் இருக்கும். காலமும் காதலும் வளர்ந்தது. அதுமட்டுமில்லை நாட்டுநிலைமைகளும் மிக மோசமடைந்து வந்தது. யுத்தஅனர்த்தனத்தால் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவுவதில்

காந்தனும் ஜீவனாவும் பின்னிற்பதில்லை. ஈழப்போர் மூன்றின் தாக்கம் தாம் பாரம்பரியமாக உறவுகளோடு வாழ்ந்த இடங்களையும்விட்டு இடம்பெயர வைத்தது.

## சாப்பாட்டு ராமன்

ஒரு திருமணவீட்டில் திருமணம் முடிந்து விருந்து நடந்துகொண்டிருந்தது. எல்லோரும் ஒருபிடி பிடித்துக்கொண்டிருந்தார்கள். ஒருவருக்கு மட்டும் உணவு உண்டு முடித்ததும் நிலமை மோசமாகிவிட்டது. அவரால் மூச்செடுக்கக் கூட முடியவில்லை. அவரது அவதியை பார்த்துவிட்டு யாரோ வைத்தியரை அழைத்து வந்தார்கள். வைத்தியர் நன்கு பரிசோதித்துவிட்டு முதலில் கைவிரல் ஒன்றை வாய்க்குள் விட்டு வாந்தி எடுக்கும்படி கூறினார்.அதற்கு அவன் பாதிசைகையும், பாதிவார்த்தைகளுமாக சொன்னான் " ஐயா ஒருவிரல் விடக்கூடிய இடைவெளி இருந்திருந்தால் நான் இன்னுமொரு வாழைப்பழம் சாப்பிட்டிருப்பேனே" வைத்தியர்தான் இறுதியில் மயங்கி வீழ்ந்துவிட்டார்.

செவிவழி நகைச்சுவைக் கதைகள்
தொகுப்பு:கைலை

கொலைவெறிபிடித்த இராணுவத்தின் குண்டுகளும், ஷெல்வீச்சுக்களும் மக்களை கிழித்தெறிந்தன. பாவிகளுக்குப் பலியான அந்த உடல்களை அகற்றுவது காயம்பட்டவர்களுக்கு முதலுதவி வழங்குவது காந்தனின் பணியானது.
வயோதிபர் ஒருவரை பாதுகாத்து இடம்மாற்றுவதில்
ஏற்பட்ட தாமதம் காந்தனையும் சேர்த்து.......

ஜீவனாவின் காதல், எதிர்கால வாழ்க்கை, அவள் உயிரில் இணைந்த அந்த உறவு எல்லாம்தான் போய்விட்டது. செய்தியறிந்து சிலநாட்கள் கவலையில் துடித்தாலும் பின்னர் கொஞ்சம் தெளிவுபிறந்தது. அவள் இழந்தது அவளது எதிர்காலத்தை, காதலனை, மட்டுந்தானா? என்பது மனதில் உறைத்தது. தான் வாழுகின்ற தாய்மண்ணின் சுதந்திரத்தையும் இறைமையையும் சேர்த்தல்லவா தொலைத்துவிட்டாள். சிலநாட்களில் ஜீவனாவை காணவில்லையென்று பேசிக்கொண்டார்கள். தோழி மாலாதான் அவளை எங்கோ சீருடை அணிந்தபடி கண்டதாக அவள் பெற்றோரிடம் கூறினாள்.

தன்காதலனை தொலைத்ததற்காக ஆயுதம் ஏந்தவில்லை. தன்னைப்போல் இன்னும் எத்தனைபேர் இழப்புகளை நினைத்து புலம்பிக் கொண்டு இருப்பதுஅவர்களுக்காகவும்தான். இன்று அவளது பங்களிப்பு சுதந்திரத்தை நோக்கிய பாதையின் தூரத்தில் ஓரளவை யாவது குறைத்துவிடும் எனும் உணர்வில்தான் தன்னை அரப்பணித்திருந்தாள் ஜீவனா.

## விக்னா

**கலைவாணி**

கலைவாழ்வில்.. தொடர்ச்சி

நமது
கலைஞர்களும் எதிர்காலத்தில் சாதனை படைப்பார்கள். தமது
படைப்புகளிற்கு சொல்லப்படும் விமர்சனங்களை கருத்தில்
கொண்டு தம்மை திருத்திக்கொள்ள முன்வர கலைஞர்களும்,
ஆதரவு கொடுப்பதோடு சரியான விமர்சனங்களை முன்வைக்க
ரசிகர்களும் தயாராக வேண்டும்.

# நீண்ட மூக்கு அழகு



எடுப்பான மூக்கு, துடிப்பான சரீரம் என்பதெல்லாம் வெறும் கவிஞர் வார்த்தைகள் மட்டுமே. நீளமான மூக்குள்ளவர்களில் சிலர் தாங்கள் அழகில்லாமல் இருப்பதாகவும் அதற்கு தங்கள் மூக்குத்தான் காரணம் என்று பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை செய்வதும் உண்டு. இன்றைய விஞ்ஞானக் கண்டுபிடிப்பு என்ன தெரியுமா? நீண்ட மூக்குள்ளவர்களுக்கு நுரையீரல் புற்று நோய் வருவதில்லை. காரணம் சுவாசித்து உள்ளிளுக்கும் காற்று நீண்டமூக்கில் நன்றாக வடிகட்டி வருவதுதான். உங்களுக்கு நீண்ட மூக்கு இருந்தால் தடவிப்பார்த்து பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.


உங்கள் தேவைக்காக பரிஸ் லாச்சப்பலில்

**COPY LACHAPELLE**

**PHOTOCOPY SERVICE**

கறுப்பு வெள்ளை 25cts

கலர் 4.50CTS

32.PHILIPPE DE GIRARD
75010 PARIS

# தாய்ப்பாலின் முக்கியத்துவமும் துணையுணவு கொடுப்பதன் அவசியமும்.

குழந்தைக்கு தாய்ப்பாலை விட சிறந்த உணவு இருக்கமுடியாது. அதன்மூலம் குழந்தை பெறக்கூடிய சிறப்பியல்புகளை அளவிட முடியாது. தாயானவள் பாலூட்டும் நேரத்தில் சில முக்கியமான விடயங்களை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். பாலூட்டாவிட்டால் குழந்தைக்கு ஏற்படும் பிரதிகூலங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். தாய்ப்பால் காபோவைதரேற்று, புரதம், உயிர்ச்சத்துக்கள், கனியுப்புகள் தேவையான அளவில் உள்ளடங்கியுள்ளஒரு நிறையுணவாகும். நோயெதிர்ப்பு, துப்பரவு, தயாரிப்புசிரமம் இன்மை என்பனவும் தாய்ப்பாலின் சிறப்புத்தன்மைகள். குழந்தைக்கு மலச்சிக்கலை தடுத்து வயிற்றோட்டம், நெஞ்சுச்சளி போன்ற நோய்களிலிருந்து இலகுவில் குணப்படுத்தக்கூடியதாகவும் இருக்கிறது. அதுமட்டுமல்ல தாய்க்கும் பிள்ளைக்கும் அன்புப் பிணைப்பை ஏற்படுத்துவது அதன் தனித்தன்மை

. ஆறு மாதங்களுக்கு தாயப்பால் தனிஉணவாக குழந்தைக்கு போதுமானது. தாயப்பால் தேவைப்படும் போதெல்லாம் கொடுக்கவேண்டும். பாலூட்டும் காலங்களில் மார்பகங்களை சவர்க்காரத்தினாலும் இளஞ்சூட்டு நீரினாலும் கழுவிக்கொள்ள வேண்டும். அதைவிட முக்கியமானது மனதில் கர்ப்ப காலத்தைப் போலவே குழந்தையை ஒருமித்த சிந்தனைஅமைய வேண்டும். ஒழுங்கான முறையில் அமர்ந்து முகமலர்ச்சியோடு கொடுக்கவேண்டும். பாலூட்டப் படாத குழந்தைகள் சத்துக் குறைபாடு உடையவர்களாக காணப்படுவதோடு வயிற்றோட்டம், புழுவியாதி, இருமல் போன்ற வியாதிகளை உடையவர்களாக காணப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல பல்வேறு நோய்களாலும் பாதிப்புற்று வயதிற்கேற்ற வளர்ச்சி இல்லாதவர்களாகவும் வயிறு முகம் கைகால் என்பன வீங்கிய வடிவமுடையவர்களாகவும் காணப்படுவார்கள்.

துணையுணவு என்பது தாய்பாலோடு குழந்தைகளுக்கு கொடுக்கப்படும் உபஉணவாகும்.துணையுணவை பொறுத்த வரையில் அதன் போசணைப் பெறுமானங்கள், கொடுக்க வேண்டிய கால அளவுகள் தயாரிக்கும் முறைகள் பற்றி தாய்மார் தெரிந்து வைத்திருக்க வேண்டும். 2ம் மாதத்திலிருந்து பழரசம் கொடுக்கலாம். 2, 3 தேக்கரண்டி சீனியை 2,3 அவுன்ஸ் கொதிநீரிலிட்டு ஆறவைத்து பிழிந்த பழச்சாற்றில் ஒருதேக்கரண்டி விட்டுக்கொடுக்கலாம்.

தாஜ்மகால் மன்னன் ஷாஜகானால் மும்தாஜிற்காக கட்டுவிக்கப்பட்டது என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். இருபத்தியிரண்டாயிம் தொழிலாளர்கள் பத்து வருடமாக உழைத்து உருவாக்கியிருக்கிறார்கள். நுழைவாசல் மட்டும் நூறு அடி உயரமானது. மன்னனின் காதலுக்கு ஏற்பட்ட செலவை பார்த்தீர்களா!

மூன்றாம் மாத முடிவில் அரைத்தேக்கரண்டி மசித்த (வாழை, பப்பாசி) பழங்கள் கொடுக்கலாம். 4ம் மாதமுடிவில் தினமும் அரைத் தேக்கரண்டி அரைஅவியல் மஞ்சட் கருவை கொடுக்க வேண்டும். அடுத்த மாதத்தில் வெண்கருவிலும் கொஞ்சம் சேர்க்க வேண்டும். பின்னர் மெதுவாக அளவுகளை கூட்டிக்கொள்ள லாம். இரண்டவுன்ஸ் வடித்த கஞ்சியை உப்பு, சீனி என்பன சிறிதளவு கலந்து கொடுக்கலாம். தானிய வகைகளின் களி பிள்ளைகளுக்கு மிகவும் நல்லது. தொடர்ந்து வரும் மாதங்களில் மரக்கறிவகைகளை சேர்த்து சூப் தயார்செய்து கொடுக்கலாம். போஞ்சி, கரட், என்பவற்றோடு கட்டாயமாக ஏதாவது இலைக்கறிவகைகள் சேர்த்து அவித்தெடுத்த சாற்றை கொடுப்பது நல்லது. சமிபாடடைய இலகுவான உணவாக இருப்பதும் முக்கியமானதாகும். மதிய போதுகளுக்கு இறைச்சி, நெத்தலிக்கருவாடு, சிறுமீன், இறைச்சி சேர்த்தும் அவிக்கலாம். பிள்ளையின் மாதங்கள் செல்லச்செல்ல உணவுகளையும் அதிகரிக்க வேண்டும். பசுப்பாலை தண்ணீர்கலந்து அதன் செறிவுத்தன்மையை குறைத்து கொடுக்க வேண்டும். ஆனால் இந்த நாடுகளில் குழந்தைகளுக்கு கொடுக்க தயார் நிலையில் விற்பனை செய்யப்படுவதால் அவற்றை வாங்கிக் கொடுக்கலாம்.

குறைந்த பட்சம் ஒன்றரை வயதுவரையாவது தாய்ப்பால் கொடுப்பது பிள்ளையின் ஆரோக்கியத்தை பாதுகாத்து வளர்ச்சியை அதிகரிக்கச் செய்யும். மேல்நாட்டவர்களின் பழக்க வழக்கங்களை பின்பற்றியோ, அல்லது தங்களின் வசதி கருதியோ தாய்ப்பால் கொடுக்காமல் இருப்பது நல்லதல்ல. தாயும் சேயும் அன்புப்பிணைப்பில் வாழுவது மட்டுமல்ல வருங்காலத்திலும் உங்கள் பிள்ளைகள் நல்ல முறையில் சமூகத்தோடு இணைந்து வாழவும் இப்போதே தயார்செய்கிறீர்கள் என்பதும் உண்மை. தாய்மீது பாசம் கொண்ட பிள்ளைதான் நாளை நாட்டின் மீதும் மொழியின் மீதும் பற்றுவைக்கும்.

*– ஸ்ரேல்லா ஜெயதீஸ்*

# காகிதம் பிறந்த கதை

இன்று காகிதம் அறிவியல், தொடர்பூட்டல் இன்ன பல்வேறு துறைகளுக்கும் அத்தியாவசியமானதாக திகழ்கிறது. காகிதபாவனை இல்லாத உலகினை கற்பனை பண்ணவே முடியாது. ஆதியில் மனிதன் கருத்துப் பரிமாற்றத்திற்கு மொழிகண்டுபிடித்து பேசிப்பழகி பின்பு வேறுவிதங்களில் வெளிப்படுத்த முனைந்து எழுதும்முறை கண்டுபிடித்ததும் காகிதத்திற்கான தேவையும் பிறந்தது. எலும்புகள், களிமண், பதப்படுத்தப்பட்ட தோல், இலைச்சருகுகள் என எத்தனையோ ஊடகங்களில் எழுத ஆரம்பித்தான். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குறைகள்.காலம் கழிய பட்டுத்துணிகள் கண்டுபிடித்து எழுதிக்கொண்டிருந்த சீனர்கள் கிபி முதலாம் நூற்றாண்டளவில் மெல்லிய துணிபோல் மரப்பலகைகளை தயாரித்து அதில் எழுதியிருப்பதற்கு சான்றுகள் இருக்கின்றன. கிபி 105இல் சாய்லூான் என்பவர் தாவரங்களின் நார்களை அரைத்து கூழாக்கி தட்டையான கடுதாசியை உருவாக்கினார். இதனால் சீனர்கள் காகிதத்தில் எழுத தொடங்கினாலும் ஏழாம் நூற்றாண்டளவில்தான் கொரியா வழியாக ஜப்பானுக்கு பரவியது இந்த காகிதம். 770இல் காகிதத்தில் அச்சடிக்கும் வழக்கம் தோன்றியது. (770இல் துருக்கியில் கைதாகியிருந்த சீனக்கைதிகள் காகிதம் செய்யும் ரகசியத்தை துருக்கியர்களுக்கு சொல்லிக்கொடுத்து விடுதலைபெற்றதாக ஒருவரலாறு நிலவுகிறது.)

9ம் நூற்றாண்டில் எகிப்திலும் பின்னர் மொறோக்கோவிலும் காகிதம் செய்யும் தொழில் பரவியது. மொறோக் வழியாக ஸ்பெயின் மூலம் இத்தாலிக்கும் வந்தது. ஆனால் காகிதத்தின் விலைமட்டும் அதிகமாய்தானிருந்தது. இத்தாலிய காகிதத்தின் புகழ் 13ம் நூற்றாண்டில் ஆசியாவில் பரவியது. பிரான்சில் 1348இல் காகித ஆலைகள் உதயமாயிற்று. ஆனாலும் 14ம் நூற்றாண்டில் ஐரோப்பாவிற்கு காகிதம் வந்த பின்புதான் அதிகம் வளர்ச்சி கொண்டது. 17ம் நூற்றாண்டில் மிக தரமாக இருந்தது ஒல்லாந்தர்களின் காகிதம். 1844இல் கெல்லர் என்பவர் மரக்கூழ் கண்டுபிடித்தார். தற்கால காகிதத்தொழில் சிறக்க காரணமாயிருந்தது கெல்லரின் கண்டுபிடிப்புதான். 1820வரை காகித்தின் ஈரம் கையாலேயே ஒற்றி எடுக்கப்பட்டது. பின்னாளில் அதற்கும் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. **நிக்கோலஸ் லுாயி ரெபேட்** எவ்வளவு நீளமான காகிதத்தையும் செய்யக்கூடிய இயந்திரத்தை கண்டுபிடித்தார். தொலைபேசிக் கம்பிகளுக்கு காவலியாக 1891 வரைபயன்படுத்தப்பட்டது. இன்று எத்தனையோ சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டும் இன்னும் காகிதத்திற்கு பற்றாக்குறை நிலவுகிறது.

கதலி தழைக்க எமது நல்வாழ்துக்கள்

# சண்யோ & வீனஸ்

வீடியோ மூவிஸ் பாரிஸ்

(வீடியோ படப்பிடிப்பில் பல வருட அனுபவம் மிக்கவர்கள்)

திருமண வைபவங்கள்,

பிறந்ததின வைபவங்கள்,

பூப்புனித நீராட்டு விழாக்கள்.

## உங்கள் அனைத்து வைபவங்களுக்கும்

- மண்டபம் / மண்டப அலங்காரம்
- முத்து மணவறை
- தலைப்பாகை/ மணப்பெண் சோடனை
- பூமாலை

இன்னும்

அழைப்பிதழ் / சாப்பாட்டு ஒழுங்குகள்

## நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் !!!

# SUNYOAH & VENUS

VIDEO MOVIES

உங்கள் தொடர்புகளுக்கு

கருணா: ராஜன்:

விக்கி: 48-37-14-38 60-34-64-55

# புதுவாழ்வை அமைப்போம்.

மனிதன் மென்மையான உள்ளத்தையும், உயர்ந்த எண்ணங்களையும், நல்ல பண்புகளையும் கொண்டு வெள்ளை மனம் படைத்தவனாகவே பிறக்கிறான். இவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னையின் வளர்ப்பில் தான் அடங்கியிருக்கிறது. கருவறையில் தொடங்கி கல்லறையில் முடியும்வரை வேதனைகள், சோதனைகள், வெற்றிதோல்விகள் என்பன சுழல் சக்கரம் போல மாறிமாறி ஏற்படுகின்றன. கரடுமுரடான, மேடுபள்ளங்கள் நிறைந்த வாழ்க்கையில் மனிதன் விழிப்பாய் நடந்து செல்வது அவசியம். தவறினால் சறுக்கி வீழ்ந்து விடும் அபாயம் இருக்கிறது. வாழ்க்கை என்பது வாழ்வதற்குத்தான். ஆயுள் முடியும்வரை இவ்வுலகில் வாழ்ந்து முடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கப் பட்டிருக்கிறோம். எப்படியும் வாழலாம் என்பதைவிட இப்படித்தான் வாழவேண்டும் என்று சில விதி முறைகளை ஏற்படுத்தி அதனுள் வாழ்ந்து வந்தால் அதுவே நமது வாழ்க்கையின் தத்துவமாக அமைந்து விடுகிறது.

மனித வாழ்க்கை குறுகியதுதான். அதனை இனிமையாக்குவதும் கசப்பாக்குவதும் நமது செயற்பாடுகளில்தான் தங்கியிருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. நிலையற்ற எமது வாழ்க்கையில் இவ்வுலகிற்காக நிலையானவற்றை செய்ய வேண்டும். ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஆற்றல்கள், சிந்தனைகள், திறமைகள், பண்புகளை கொண்டிருக்கிறார்கள். இவை இறைவன் மனிதனுக்கு கொடுத்த கொடையாகும். எனவே இவற்றை இன்னும் நல்ல முறையில் வளர்த்தெடுப்பதன் மூலம் எமது வாழ்வை வளமாக்க முடியும். இளமை என்பது ஒவ்வொருவருக்கும் ஒரேஒருதடவை மட்டும் இறைவனால் பரிசளிக்கப்படுவதாகும். எனவே இந்தக்காலத்திலேயே இளைய தலைமுறையினர்கள் தங்கள் வாழ்வின் குறிக்கோள்களை திட்டமிட்டுக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். வாழ்வை வளம்படுத்த முக்கியமானதான குறிக்கோள் இல்லாவிட்டால் அந்த வாழ்க்கை உப்பில்லாத உணவுபோலாகி விடுகிறது. குறிக்கோளை தெரிவு செய்யும் போது எமது ஆற்றல், அறிவு என்பவற்றிற்கு ஏற்ப தெரிவு செய்ய வேண்டும். அவ்வாறு தீர்மானித்த குறிக்கோளை அடையும்வரை உறுதியான மனநிலை நமக்கு அவசியமானதாகும்.

நிறைவேற்றுவதில் இடைஞ்சல்கள், தடைகள் என்பன குறுக்கிட்டாலும் விடா முயற்சியோடு வெற்றி பெறவேண்டும்.

வாழ்க்கையில் முன்னேற்றம் எனபது முயற்சியில்தான் தங்கியிருக்கிறது. முயன்றால் முடியாதது ஒன்றும் இல்லை. முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார், முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும் , என்பன போன்ற முன்னோர் வார்த்தைகளை எண்ணிப்பார்க்க வேண்டும். எமது முயற்சியும் உழைப்பும் ஒருபோதும் வீணாகமாட்டாது. தகுந்த பலனை நிச்சயம் பெறுவோம். வாழ்க்கையில் குறிக்கோள், தளராத முயற்சி எனபவற்றை போலவே நேரமும் முக்கியமான ஒன்றாகும். நேரம் பொன்னானது. பொன் கொடுத்தாலும் போன நேரம் திரும்பி வரப்போவதில்லை. நம்மை பெற்றவர்க்கும் பிறந்த, நாட்டிற்கும் பெருமை சேர்க்கும் வகையிலும் ஏன் எமது வாழ்வினை அர்த்தமுள்ளதாக்கவும் எமக்குரிய ஆற்றலுக்கும் திறமைக்கும் ஏற்றவாறு தகுந்த குறிக்கோளினை தேர்வுசெய்து உரிய நேரத்தில் காலந்தாழ்த்தாது விடாமுயற்சியோடு செயற்பட்டால் உன்னதமான வாழ்க்கைநிலையை அடைந்துவிட முடியும். அதிலும் எமது சமூகம் பயன்பெற என்ன செய்தோம் என்ற சமூக சிந்தனையோடும் செயற்ப்பட்டால் எங்கள் சமூகமும் பயன்பெறும் அல்லவா. ஒவ்வொரு நிமிடத்தையும் ஒரு இலட்சிய நோக்கோடு பயனுள்ளதாக செலவுசெய்வோமே.

திருமதி. வினிஷயா–ஸ்ரீபன்ஸ்


# விற்பனைக்கு

**FORD ESCORT (GTI)**
ANNEE : 87
120 000 KM
17 500 F
BONNE ETAT
MOTOR NOVEAU

**CITROEN (BX)**
ANNEE : 1986
103,000 K M
14000F
BONNE ETAT

தொடர்புகளுக்கு 42 05 77 75

# முகம்
## ஒரு
## பார்வை




அண்மையில் திரையிடப்பட்ட அருந்ததியின் முகம் புலம் பெயர்ந்த ஈழத்து கலைஞர்களின் கலைமுயற்சிகளை ஏளனம் செய்தவர்களை விழியுயர்த்த வைத்திருக்கிறது என்பது உண்மை. தென்னிந்திய தமிழ் சினிமாவின் கற்பனை கலக்காத எங்கள் அகதிவாழ்வின் இயல்பான பதிவுகள்தான் முகம். அதன் உட்கட்டமைப்புகளில் வித்தியாசம் இருக்கத்தான் செய்கிறது. அருந்ததியின் முயற்சி போற்றுதற்குரியது. சாம்சன் தன்னை வருத்தியிருக்கிறார். இயல்பான நடிப்பு என்பது அவருக்கு கைவராத கலையாகவே உள்ளது. ஆனால் அவரது நண்பராக வரும் கலைச்செல்வன் எமக்குள் மிகஆழமாக பதிந்து விடுகிறார். அவ்வாறே தங்கமும் முகுந்தனும் கூட. ஏனைய கலைஞர்கள் கௌரவ தோற்றங்களாகவே வந்து போகிறார்கள். இசையில் ஒரு இயல்புத்தன்மை தெரிகிறது. படத்தொகுப்பும், ஒலிச்சேர்க்கையும் தரமாக இருந்தது. பாபு, ரவி ஆகிய ஒளிப்பதிவாளர்கள் இருவரும் தங்களால் முடிந்தவரை பார்வையாளர்களை படத்தில் ஈடுபட வைத்திருந்தார்கள். அகதி வாழ்வின் இயந்திரத்தன்மையோடும் குறைவான தொழில்நுட்பத்தின் உதவியுடனும் இன்னும் சொல்லப்போனால் சாதாரண வீடியோ கமராவினால் படப்பிடிப்பிற்கென்று தளங்களும் இல்லாமல் கிடைத்த இடங்களிலே படப்பிடிப்பை நடாத்திருககிறாா்கள் முகம் படைப்பாளர்களின் பின்னணியில் பெரும் தியாகமும் உழைப்பும் இருப்பதை யாரும் மறுக்க முடியாது. அருந்ததி தனது இனிவரும் படைப்புகளில் சொந்த அனுபவங்களை மட்டும் பதிவு செய்யாது ஒரு பொதுப்பார்வையை முன்வைக்க முன்வர வேண்டும் என்பது எங்கள் அவா!

*— குணா —*

# இது கவிதை அல்ல

என்னவளே......
ஒரு அதிகாலையில் இம்மடல் வரைகிறேன்
கோபித்துக்கொள்ளாதே
ஒரு கணம்உன்நினைவுகளையும்
மறந்த நிலையில்தான்...

முன்னிரவுக் கனவுகளில்
ஒரு கவிதை சொன்னேன்
விழித்ததும்
என் முன்னே நிஜமாக

புல்நுனியினில் படுத்துறங்கிடும்
பனித்துளி கண்டேன்.
வண்ணச்செடிகளில்துளிர்த்திடும்
பூந்தளிர் கண்டேன்

அந்த அதிகாலையில்
பச்சைக்கிளியொன்று
பிள்ளைத்தமிழ் பேச
என்னை அழைத்தது.
சின்னக்குயிலும்கொஞ்சும் குரலில்
கவிதை சொன்னது.

என் காதலி
மெல்லமொட்டவிழ்ந்த
ரோசாவில் என்கரம்
பட்டதும்
தேனீ கொட்டியது
தன்காதலியை
தொட்டுவிட்ட கோபந்தான்
மெல்லிய வலிதான்

என்னவளே அந்தப்பொழுதினில்
ஒருகணம்
உன்னையும் மறந்தேன்
உண்மை
ஆனால்
அந்த அமைதியிலும்
தொலைதூரத்தில் கேட்ட
வெடியோசை
என்னை அதிரவைத்தது.

-சிவா.

# கதலி முளைவிடுகையில் வந்த வாழ்த்துக்கள்

*கதலி* எனும் இதழே....
காத்திருக்கிறேன் உனக்காக
புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தில்
புதியதோர் இடம்பிடிக்க
இதயத்தால்...... வாழ்த்துகிறேன்.
உன்னுடைய வரவு....
புலம்பெயர்ந்தோரிடையே
புலம்பெயர்ந்து விடவில்லை.......
இலக்கியதாகம் என்பதற்கு
இன்னுமொரு எடுத்துக்காட்டு
சின்னக்குழந்தையென்று தெரிந்தும்
உன்னிலும் பிழைபிடிப்பர்
குழந்தை பிறந்தவுடன் நடப்பதில்லை
முதலில்......
தனக்குள்ளே அது சிரிக்கும்.
கை, காலை ஆட்டி
முதுகு புரட்டியொருநாள்
முகம்பார்த்து.... சிரிப்புதரும்.
பின்பு அரக்கி, தவழ்ந்தொருநாள்,
எடுத்து அடிவைத்து
எதிரே விழுந்து அழும்...
மீண்டும் எழுந்து...... மெச்ச நடைநடந்து
மேனியெல்லாம் சிலிர்க்க வைக்கும்.
கதலி இதழே காத்திருக்கிறேன் உனக்காக.

அன்புள்ள
***நிலாவெளி கைலை***

**கதலி**சிறப்பாக வெளிவர
வாழ்த்துகிறேன்
**வண்ணை தெய்வம்**

பத்திரிகைத்துறை சமூகபொறுப்புணர்வு
வாய்ந்தது. பொருளாதார அபாயமும்
உள்ளது.
இவற்றை கவனத்தில் கொண்டு கதலி
செயற்பட வேண்டும்.
கதலி தமிழர் உள்ளங்களில்
ஆழமாக வேரோட என்வாழ்த்துக்கள்.
**ந.ஸ்ரீதர்**
பரிஸ்

கதலியே!
இனிதே. இளமையுடன் என்றும்
வாசகர்களை கவரும் வன்மையுடன்
வெளிவர வேண்டும்.
சிந்தனைகளை ஏற்படுத்து
விளக்கங்களை கொடு.
உன் வரவை
எதிர்பார்க்க வைத்து விடு.
–சதீஸ்

# பாரதியும் பாப்பாபாட்டும்



பாரதியாரின் இரண்டாவது பெண் பாப்பா என்கிற சகுந்தலாவுக்கு ஐந்து வயது. பாரதியார் ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். அப்பொழுது அவரது செல்வமகள் பாப்பா அழுதுகொண்டே ஓடிவந்தாள். அவர் மனைவி செல்லம்மாள் அடித்ததில்தான் மகள் அழுகிறாள் என்பதை புரிந்து கொண்டார் பாரதியார். ஏன்குழந்தையை அடித்தாய். அவள் தவறொன்றும் செய்யவில்லையே? என்றார் பாரதியார்.

உங்கள் பாட்டிற்கு எழுதிக்கொண்டே இருக்கிறீர்கள். நான் ஏதாவது வேலையாக இருந்தால் பாப்பா வெளியே நழுவிவிடுகிறாள். அடுத்த வீடுகளுக்கு போய் விளையாடி அடிபட்டுக் கொண்டு வருகிறாள். அவளை தேடி சமாதானம் செய்வதே எனக்கு பெரிய வேலையாகி விடுகிறது. வெளியே எங்கும் போகாதே என்று சொன்னேன். அதற்குத்தான் அழுகிறாள் என்று பதில் சொன்னார் செல்லம்மாள்.

பாரதியார் குழந்தையை அருகிலே அழைத்தார். பாப்பா நீ எங்கும் போகாதே! நான் பாட்டுச் சொல்லித் தருகிறேன் பாடுகிறாயா? நீயும் எங்கேயும் போகவேண்டியிராது, அம்மாவும் அடிக்கமாட்டாள் என்று பாப்பாப் பாட்டை பாடினார். குழந்தையும் கூடப்பாடினாள். அவள் வளர வளர பொருளையும் சொல்லிக் கொடுத்தார்.

சகுந்தலாவின் பெயரில் தமிழ் பாப்பாக்களுக்கு அருமையான பாப்பாப்பாட்டு கிடைத்தது.
பாரதி வாழ்வில் நூறு சுவையான நிகழ்ச்சிகள் எனும் நூலிலிருந்து,

—சுமதி

# ஒரு நிமிடம்

ஈழத்தின் சீவாதாரப்பயிர்களில் வாழையும்ஒன்று. மா, பலா வாழை என முக்கனிகளிலும் ஒன்று. கப்பல்,கதலி, இதரை, மொந்தன் யானை, என பழங்களை சுவைத்த அனுபவமும் உண்டு.

கட்டிடக்காடான பிரான்ஸில் இருந்துகொண்டு பசுமைநிறைந்த ஊர்நினைவுகளை அசைபோடும்போது! மிகஇலகுவாக என்கிராமத்தை நினைவுக்கு கொண்டுவருவது...... கதலிப்பழத்தின் சுவையை நான் சொல்லவேண்டியதில்லை. இலக்கியத்திலும் பவனிவர வந்திருக்கும் இந்தக் கதலியின் சுவையை பொறுத்திருந்து பார்ப்போமே? பொருளாதாரப்புயலில் அடிபட்டுப் போகாமல் காப்பாற்ற வேண்டியது பிலிமாலயா, சினிமா எக்ஸ்பிரஸ், காமசூத்திரா என கைகளில் சுருட்டிக்கொண்டு அலையாத ஆர்வலர்களாகிய தனித்துவமிக்க வாசகர்களாகிய உங்கள் கடன். எனவே...... காத்திருக்கிறோம்.

கடைசிப்பக்கத்தில் ஏதாவது ஒரு விடயத்தை சொல்லிவிடுவோமே! காசிஆனந்தனின் "தமிழனா தமிங்கிலனா"வை அண்மையில் படிக்க நேர்ந்தது. தமிழரை பிடித்திருக்கும் தமிங்கில நோய்க்கு வைத்தியம் செய்யும்படி அறைகூவல் விடுத்திருக்கிறார். எத்தனை வைத்தியர்கள் முன்வரப்போகிறார்களோ தெரியவில்லை. பிரான்சிலும் எங்கள் சிறிசுகள்........

"என்ரை பிள்ளைக்கு தமிழ் சரியா வராது" என பெருமைப்படும் பெற்றோரும்,

"மம்மா, பப்பா தறவாய் போய்ட்டார் நான் எக்கோல் போறன்"..... என தமிழும் பிரெஞ்சும் கலந்து பேசும் எம் மழலைகளும்........

கொஞ்சம் கொஞ்சமாய் நாங்களும் மொறீசியஸ், பர்மிய, தமிழர்களாய் ஆகிக்கொண்டிருக்கிறோமா?

காலந்தான் பதில் சொல்ல வேண்டும்.

காலத்துக்காக காத்திருக்காமல் முயற்சித்தால்............

அன்னை தந்தையர் முயற்சித்தால்..........

எங்கள் மழலைகளும் தம் தாய்த்தமிழில் அழகாக கொஞ்சுமொழி. பேசும்.

மீண்டும் ........

*–ரமேஸ்சிவரூபன்*

நம்பிக்கை! நாணயம்!! உத்தரவாதம்!!!

# குமார்ஸ் சொப் S.A.R.L

# KUMARS SHOP

**80, BD BARBERS, PARIS - 75018**
**MO: MARCADET POISSENIER**

உங்கள் பணத்தை என்றுமே
பெறுமதி குறையா தங்கத்தில் முதலீடு
செய்ய இன்றே எங்களை நாடுங்கள்.

**பல்லாண்டு காலமாக உங்கள்**
**நகைத்தேவைகளை பூர்த்தி**
**செய்வதில் முன்னணி வகிப்பவர்கள்**

அரச அங்கீகாரம்



புதிய பல வடிவங்கள்
நியாயமான விலை
அனைத்திற்கும் ஒரே பெயர்
குமார்ஸ்

**KUMARS JEWELS**
80 BD BARBERS
75018- PARIS
TEL: 42-59-11-52

**K.T.C. JEUWELS**
193 FG-ST.DENIS
75010-PARIS
TEL:42-05-41-36

சுவை! தரம்!! மலிவு !!!

# BOUCHEARIE GABRINA

BG

கபறினா இறைச்சிக்கடை




கோழி, கோழிக்கால், முயல்இறைச்சி, மாட்டிறைச்சி ஆட்டிறைச்சி

ஆட்டிறைச்சிப் பங்குகள் தினமும்

மாட்டிறைச்சிப் பங்குகள்
மரைவத்தல்
மான்மரை இறைச்சிகள்
உயிர்கோழி இறைச்சி

சனி ஞாயிறு
தினங்களில்

விசேட வாசனைத்துாள்

வறுத்த மிளகாய்த்துாள்

வியாபாரிகளுக்கும், விசேட கொள்வனவுகளுக்கும்
விசேட விலைக்கழிவும் விநியோகமும்

**207, Rue. Fbg St denis**
**75010-Paris**

TEL:46-07-07-88
FAX:46-07-07-73

M° La chappele/ Gare de Nord